
# இணுவில் ஒலி

## இருதிங்கள் ஏடு









(கார்த்திகை ~ மார்கழி 2012) விலை : ரூபா 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே."

# 'இணுவில் ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை - மார்கழி 2012 வில் - 1 ஒலி - 2

***நிறுவுனர் / காப்பாளர் :***
நடராசா சச்சிதானந்தன்

***ஆசிரியர் :***
த. சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொ.பேசி : 071 8676482

***நிர்வாக ஆசிரியர் :***
சிவலிங்கம் சரவணபவன்
தொ.பேசி : 077 3126802

***சஞ்சிகைக்குழு :***
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
பேராசிரியர் க. தேவராஜா
திருமதி. க. வைகுந்தம்
சு. சண்முககுமார்
மா. ந. பரமேஸ்வரன்
சு. பரமேஸ்வரலிங்கம்
க. பரமேஸ்வரன்
க. கண்ணபிரான்
திருமதி க.கிருஸ்ணபிள்ளை
அ. குகதாசன்
ம. காண்டீபன்
சொ.ஹரிசங்கர்
தே.சதீசன்
பி.அஜந்தன்
யோ.சுதந்திரன்

***வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :***
இலண்டன் : சபேசன் சண்முகநாதன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
கனடா : ம.இராஜகுலசூரியர்
ஜேர்மனி : ஆ.வடிவேற்கரசன்
டென்மார்க் : கணேசு பரமநாதன்
சுவிஸ் : நடராஜா மனோகரன்
நோர்வே : நல்லையா சண்முகப்பிரபு
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

***தொடர்பு :***
9 - 2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி : 011 4902406

47, கருணாகரப் பிள்ளையார் வீதி,
இளந்தாரி கோவிலடி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.

**E-mail : inuviloli@hotmail.com**

படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் செம்மை பார்த்தபின் பிரசுரமாகும்.

– ஆசிரியர் –

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து... | 02 |
| **கட்டுரை :** | |
| ✱ கர்மயோகி தவத்திரு வடிவேற்சுவாமிகள் | 03 |
| ✱ லண்டன் ஒன்றியம் | 07 |
| ✱ இன் கலை இலங்கு இணுவில் | 10 |
| ✱ போதைப் பொருட்களை ஒழிப்போம் சுபீட்ச வாழ்வு காண்போம் | 11 |
| ✱ சிறார் கல்விச் சிந்தனைகள்: ஒரு நோக்கு | 16 |
| ✱ புலம்பெயர் நாட்டில் எம் மக்களின் பங்களிப்பு | 20 |
| ✱ யோகாசன அனுபவ உண்மைகள் | 23 |
| ✱ அறிவுவிருத்திப் பணிகளில் பொதுநூலகம்..... | 27 |
| ✱ தமிழில் பக்தி இலக்கியங்கள் | 31 |
| ✱ ஆடற்கலை | 32 |
| ✱ கூத்தும் மரபும் | 35 |
| ✱ சிறாரின் வாசிப்பும் செயற்பாடுகளும் | 36 |
| ✱ நீரிழிவு ஒரு ஆபத்தான நோய்..... | 38 |
| ✱ எழுபத்தைந்து அகவை கண்ட தொழிலதிபர்..... | 39 |
| **கவிதை :** | |
| ✱ மத்திய கல்லூரித் தாயே! | 09 |
| **பண்பாட்டுப் பாரம்பரியம் :** | |
| ✱ இணுவில் மண்ணின் சிறப்பு | 13 |
| **சிறுவர் உலகம் :** | |
| ✱ கல்வியின் முக்கியத்துவம் | 22 |
| **நிகழ்வுகளின் சங்கமம் :** | |
| ✱ கலைகள் வளர்க்கும் கலைக்கோயில் | 15 |
| ✱ லண்டன் வாழ் எம் மக்களின் நிகழ்வுகள் | 26 |
| ✱ கலாசாரப் பெருவிழா – 2012 | 37 |
| **உங்கள் விருந்து :** | 30 |
| **ஏனையவை :** | |
| ✱ தொல்காப்பியத்தின் சிறப்பு | 08 |
| ✱ வாழ்மொழி இலக்கியங்கள் | 09 |
| ✱ வளர்முக நாடுகளில் இணையத்தின் பயன்பாடு | 34 |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனையிலிருந்து....

ஆண்டாண்டு காலமாக எம்மவர்களின் வரலாற்றுப் பதிவாகப் பண்பாடு போற்றப்பட்டு, கலாசாரப் பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு பெருமையுடன் விளங்கிய எமது தாய்த் திருநாடு, இன்று சீர்கெட்டு நிற்கின்ற நிலையைக் காணும்போது வேதனையாயிருக்கிறது. ஊடகங்கள் செய்தியாக இவற்றைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. மக்கள் சொல் அம்புகளால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயம் செய்வதறியாது திணறி நிற்கின்றது. உண்மையை மறைப்பதால் நாம் கற்புடையவர்கள் ஆகமாட்டோம். காலத்தின் தேவையறிந்து நடப்பவற்றை வெளிக்கொணர்ந்து மாற்றத்திற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னெடுக்க வேண்டிய பெரும்பொறுப்பு பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமுதாய நன்மை கருதிய சிவில் அமைப்பினர் ஆகியோரைச் சாரும்.

மதுபாவனை, போதைப்பொருள் பாவனை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்று இன்று இளம் தலைமுறையினரைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றது. கல்வியை மறந்து ஒழுக்கத்தை மறந்து போதைக்கு அடிமையாகி தம் வாழ்க்கையையே சீரழித்துக் கொண்டிருக்கின்றார்கள். பொய், களவு மற்றும் பலாத்காரம், கொலைகள் என்பன சர்வசாதாரணமாக அரங்கேறி வருகின்றன.

பெற்றோரின் கண்காணிப்பின்மை, ஆசிரியர்களின் அவதானிப்பின்மை, சமூகமட்ட அக்கறையின்மை ஆகிய காரணங்களால் சமுதாயச் சீரழிவுகளுக்கு மாணவ சமுதாயம் உள்வாங்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் சுற்றுச் சூழலில் தமது பிள்ளைகளின் நடமாட்டத்தையும், ஆசிரியர்கள் பாடசாலைச் சூழலில் மாணவர்கள் மேல் அவதானிப்பையும், சமூகம் இளவட்டத்தினரின் பால் அக்கறையையும் காட்டிச் செயற்படுவதன் மூலமும் ஆரோக்கியமான முன்னெடுப்புக் களை முன்கொண்டு செல்ல முடியும்.

யுத்தத்தின் பின்னரான நாட்டின் நிலை, பல ஆயிரக்கணக்கான பெண்களை விதவை கள் ஆக்கியுள்ளது. கணவன்மாரை இழந்து, பெற்ற பிள்ளைகளுடன் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு வாழ வழியின்றி துன்பத்துக்குள்ளாகும் பெண்கள் விபச்சாரத் திற்குள் தள்ளப்படும் பரிதாப நிலையைக் காண்கின்றோம். சிலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இளவயதுப் பாடசாலை மாணவிகள் கருக்கலைப்புக்காக வைத்தியசாலைக்குச் சென்றுவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

பண்பாடு மற்றும் கலாசாரச் சீரழிவுகளைத் தடுப்பதற்கு ஏற்ற முழுமையான அவதானிப்பு இன்றியமையாததாகும். வறுமை காரணமாக விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களின் மறு வாழ்வுக்கான மாற்றங்களைக் கண்டறிந்து செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பை எதிர் கொண்டு முன்னெடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம். வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருளாதார ஒத்துழைப்பினையும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள எம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான உதவியினையும் வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அவை மேலும் மனிதாபிமானத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும். சீரான கல்வி கிடைக்கும் போதுதான் மாணவர்கள் நல்ல பிரஜைகளாக உருவாக முடியும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவை தந்த கர்மயோகி
# தவத்திரு வடிவேற்சுவாமிகள்

- இணுவில் திரு.மா.ஆனந்தர் -

"காணும் கண்ணுக்குக் காட்டும்
உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்பது சிவஞானபோதம் பதினோராம் சூத்திரம்.

பொருள்கள் யாவற்றையும் பார்க்கின்ற கண்ணுக்கு அப்பொருள்களைக் கண்டறியுமாறு அதனோடு வேறுபடாது நின்று, அதற்குக் காட்டி, அக்கண் மூலம் காணும் அப்பொருளை அறிவது உயிர். அவ்வுயிர் எவ்வாறு கண் பொருள்களை அறியுமாறு செய்து, தானும் அறிகின்றதோ, அதே போன்று அவ்வுயிர் பொருளை அறியுமாறு இறைவன் அவ்வுயிரோடு பிரிவின்றி நின்று அதனை அறியும்படி செய்கின்றார். அவ்வாறு வேறுபடாது இரண்டறக் கலந்து அருள்புரியும் இறைவனின் பெருங் கருணையை மறவாது அவ்விறைவனுடைய திருவடியாகிய சிவானந்தத்தை அன்பின் மூலம் ஆன்மா பெறும் என்று மேற்படி சூத்திரத்தின் பொருளை விரித்துக் கூறலாம்.

உடனாய் நிற்றல், காட்டுதல், காணல் என்ற மூவகை உபகார நிலையை (அருள் நிலையை)ப் பெற்றவர்களே அடியார்கள். சேக்கிழார் தாமருளிய பன்னிரண்டாம் திருமுறையில் அடியார்களின் வரலாற்றினைக் கூறுவதன் மூலம் மெய்யடியார்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அடியார்கள், அருளாளர், பக்தர் ஆகியோரை இனம்கண்டு, அவர்களது சிறப்புக்களை எடுத்துக் கூறவல்லவர்கள் அம்மெய்யடியார்களின் அடியார்களேயாவர். குருடர்களால் பூஞ்சோலையையும் காட்டையும் கண்டு மகிழமுடியுமா?

இந்தவகையில் இணுவை தந்த வடிவேல் சுவாமிகளுடன் கற்ற மாணவர்களும் அவரிடம் பயின்ற மாணவர்களும் பலர் உளர். அவர்களின் செயற்பாடுகள் சுவாமிகளின் சீரிய உண்மைகளை வெளிவிடுவனவாக அமைந்திருக்கின்றன. நண்பர் சோ.பரமசாமி அவர்கள் வடிவேல் சாமியாரை அவரின் நிழல்போல் தொடர்ந்தவர். சுவாமிகளைப் பற்றிய குறிப்புக்களை உடனுக்குடன் குறித்து வைப்பவர். அவருடைய "கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம மலர்" என்ற நூலை வாசிப்பவருக்குச் சுவாமிகளின் உண்மைத் தோற்றம் நன்கு புலப்படும். என்போன்ற வர்கள் அவரைச் சந்திக்கும் வேளைகளில் உரையாடியவர்கள். எம்மால் அவரின் பூரண வடிவத்தைக் காட்ட இயலாது. ஆயினும், கூறத்துணிவது அன்னாரிடத் தில் நாம் கொண்டுள்ள மதிப்பின் வெளிப் பாடாகும்.

வடிவேல் சுவாமிகளால் அவரது குருநாதர் மகாதேவ சுவாமிகளின் பெயரால் நிறுவப்பட்ட
**மகாதேவ ஆச்சிரமம்**
பெரிய நிலப்பரப்பில் சகல வசதிகளுடனும், பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகளின் காப்பகமாகச் செயற்பட்டு வருகின்றது. இத்தகைய நிலையை அடையப் பெரும்பணியை அன்று முன்னெடுத்த வடிவேல் சுவாமிகளை நினைவு கூர்ந்து வாழ்த்தி வணங்குவோம்.

### கருவை மாற்றிய கருணைத் தெய்வம்

இணுவையூர் கந்தப்பரும் சின்னக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் வறிய குடும்பத்தவர். எனினும், தெய்வ நம்பிக்கையும் அடியார் பக்தியும் மிக்கவர்கள். விவசாயத்தின் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். அவர்களுக்கு அடுத்த குழந்தை ஆண் - அடுத்தது, ஆண் - என்று நம்பிக்கை இழக்கும்வரை ஐந்து பெண் குழந்தைகள் பிறந்தனர். சின்னக்குட்டி அம்மையார் மறுபடியும் கருவுற்றார். "ஆறாவதும் பெண் குழந்தையானால் ................" என்றொரு கற்பனை; "கடவுளும் கைவிட்டு விட்டால்" என்ற ஏக்கம் அம்மையாரின் மனதுள் புகுந்தது.

அம்மையாருக்கு வாழ்க்கை கசந்தது. விரக்தியின் எல்லை; தன்னுயிரைப் போக்கிக் கொள்ளவும் துணிந்தார். இணுவிலின் வடகிழக்கில் இருந்த ஒரு தனிமையான இடம் நோக்கிப் புறப்பட்டார். குறித்துச்சென்ற இடம் நெருங்கியதும் அவருக்கு இரத்த ஓட்டம் அதிகரித்தது; மயங்கி வீழ்ந்துவிட்டார்.

முனகல் ஒலியுடன் மயங்கிக்கிடந்த அம்மையாரைக் காப்பாற்ற யாருமில்லை. அங்கு தோன்றாத் துணையாய்த் தோன்றினார் இணுவிலில் அருளாட்சி செய்த பெரிய சந்நாசியார். அவரின் கண் பார்வைபட்டதும் அம்மையாரிடம் அசைவு காணப்பட்டது. கண்களை விழித்து எங்கும் பார்த்தார். தன்னிலை விளங்கிவிட்டது. எழுந்து சந்நாசியாரைக் கும்பிட்டார்.

**நல்வாக்கு**

"ஏய் சின்னக்குட்டி! ஒன்றுக்கும் பயப்படாதே. உனக்குப் பிறக்கப்போவது ஆண் குழந்தை. அவனால் நீ புகழடையப் போகிறாய். அவனுக்கு 'வடிவேல்' என்று பெயர்வை. பயப்படாமல் வீட்டிற்குப்போ' என்றார் சந்நாசியார். அவரின் வாக்கு அம்மையாரின் காதுகளில் அமிர்தமாய் இனித்தது. அன்றிலிருந்து அம்மையார் ஆசைக்கனவுகள் காணத் தொடங்கினார்.

**அரிய குழந்தை வடிவேல்**

ஐந்து பெண் சகோதரிகளுடன் தாய் ஒன்றும் சேர்த்து ஆறு ஆதாரங்களினூடாக உண்டு. மகிழ்ந்து, நிலத்தில் கால்படாத் 'தேவனாய்' தான் ஒருவனே எல்லோருக்கும் ஆதாரம் என்பதை யுணராமல் வளர்ந்து வந்தான் வடிவேல்.

**கல்வி**

வடிவேல் குறுநடை பயிலத் தொடங்கிய பின் ஏடு தொடக்கப்பட்டது. பள்ளியிற் சேர்ந்து இயற்றமிழ் ஆசிரியர்களான அ.வைத்திலிங்கம் உபாத்தியாயர், எனது தந்தையார் அ.மாணிக்கத் தியாகராசா (மாணிக்கச் சட்டம்பியார்) ஆகியோரிடம் கல்வி பயின்றார்.

அத்துடன் நின்றுவிடாமல், மாலை நேரங்களிலும் ஓய்வு வேளைகளிலும் சேதுலிங்கம் (சேதர்) சட்டம்பியாரிடம் நிகண்டு, நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும் ஆத்திசூடி முதலிய நீதி நூல்களையும் பயின்று மனப்பாடம் செய்தார்.

குழந்தையின் நடைமுறைகளைக் கண்டு "இது ஞானக் குழந்தையப்பா, கொண்டு போய் யோகர்சுவாமியிடம் விடு" என்று யாரோ கந்தப்பரின் காதில் போட்டுவிட்டார்கள். ஒரு நல்ல நாளிலே குழந்தையை தோளில் சுமந்துசென்ற கந்தப்பர், யோகர்சுவாமி முன்னிலையில் விட்டுத் தமது விருப்பத்தையும் கூறினார்.

"இது பள்ளிக்கூடம் இல்லை. இங்கு பாடம் சொல்லிக்கொடுக்க ஆளும் இல்லை. கொண்டு போய் கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்தில் விடும்" என்றார் யோகர்சுவாமி.

அந்த வாக்கை அருள் வாக்காக ஏற்று தன்மகனை வேதாந்த மடத்திற்குப் பிறிதொருநாள் கொண்டு சென்றார் கந்தப்பர். அப்பொழுது அங்குள்ள சிவகுருநாத பீடத்துக் குருமூர்த்தியாய் இருந்தவர் தவத்திரு மகாதேவ சுவாமிகள். சிறுவன் வடிவேல் குருமூர்த்தியைக் கண்டதும் காந்தம் இரும்பை இழுப்பது போல் குருதேவரிடம் ஓடிச்சென்று வணங்கினான்.

சிலநாள் கழிந்தபின் குருதேவரிடம் வேதாந்த சாத்திரங்கள், தர்க்கம், ஞான நூற் பொருள்கள் முதலியவற்றை ஐயந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபறக் கற்றான். தேவையானவற்றை மனனம் செய்து, அவற்றை உடன் மாணாக்கருக்கு உரைத்து மகிழ்வான். அதனால் குருநாதரின் பேரன்புக்கு ஆளானான். இயம, நியமங்களோடு தியான வழியிலும் மனதைச் செலுத்தினான். நாளடைவில் இளைஞரான வடிவேல் எல்லாருக்கும் ஒரு சாமியாராகத் தென்பட்டார்.

வடிவேல் சுவாமியைப் பின்பற்றிப் பலர் மடத்துக் கல்வியை விரும்பினர். மாணவர் குழாம் அதிகமாயிற்று. வேதாந்த மடம் "கலகலப்பாக" விளங்கியது. திருமுறைகளும், விவாதங்களும், விளக்கங்களும் மடத்து வளவெங்கும் ஒலித்தன. அவற்றின் மீதி வடிவேல் சுவாமிகளின் இணுவிற் குடிசையிலும் தொடரும், கேட்பதற்குச் சுவாரஸ்யமாயிருக்கும்.

**வேதாந்தம் மட்டும் போதுமா?**

வேதாந்திகள் சிற்சில சமயங்களில் சித்தாந்திகளோடு மோதிக்கொள்வர். வடிவேற் சுவாமியார் அதிற் கலந்து கொள்ளார். அதனால் நண்பர்களுக்கு அவரிடம் மனக்கசப்பு ஏற்படுவதுமுண்டு. "உங்களில் யாராவது சித்தாந்தத்தைப் படித்திருந்தால், அதைப்பற்றி எனக்குச் சொல்லித் தாருங்கள். அதிலுள்ள தவறுகளை எனக்கு விளக்குங்கள். அறியாத விடையத்தை தர்க்கித்து, அவமானப்பட நான் விரும்பவில்லை" என்று சமாதானப் படுத்தி விடுவார்.

அத்துடன் சும்மா இருக்காது சித்தாந்த நூல்களை அறிந்தோரிடம் சென்று விளக்கமாகக் கேட்பார். வேதாந்தம், சித்தாந்தம் என இரு பகுதியாகப் பிரித்துத் தர்க்கிப்பது, அவர்களின் மூடத்தனத்தைக் காட்டும் என்பது வடிவேற் சுவாமிகளின் உள்ளார்ந்த கோட்பாடு. வேதாந்தத்தின் சாரமே சித்தாந்தம் என்றும் சித்தாந்தக் கல்வியைக் கற்றவர்களே சிறந்த வேதாந்திகள் என்றும் சுவாமிகள் தெரிந்து கொண்டவர்.

**பழகுவதற்கு இனியவர்**

தேவார, திருவாசகங்களைப் பண்ணுடனும் தாளத்துடனும் பாடக் கற்றவர். அவற்றின் பொருளும் தெரிந்தவர். இறை பக்தியினால் குழந்தையுள்ளம் கொண்டவர். அவரின் இனிய மொழி பகைவனையும் நண்பர்களாக்கும். அவருடன் பேசிக் கொண்டிருப்பதில் ஓர் இன்பம் பிறக்கும். நோயாளிக்குத் தெரியாமல் ஊசிமூலம் மருந்து ஏற்றுவது போல் குழைந்து குழைந்து பேசி, விடையத்தைப் புகுத்தி விடுவார். அது ஒரு தெய்வீக ஆற்றல். எவரையும் குற்றம் சொல்லார். தன்னிடம் அக்குற்றம் இருப்பதாகக் காட்டி, அதனால் ஏற்படும் விளைவுகளையும் கூறுவார். உள்ளத்தில் ஒளியுடைய சுவாமிகளின் வாக்கில் மந்திர சக்தி உண்டு. அவ்வருளாற்றல் அவரது சிறு குடிசைக்குப் பலரை அழைத்தது.

**தெருவீதியில் நிர்வாண தீட்சை**

இளைஞர் வடிவேலின் உள்ளத்தில் ஞானப்பயிர் வளர்ந்து கொண்டிருக்க, அவரது தோட்டத்தில் சாமிப் பயிர் வளர்கிறது. ஒருநாள் தோட்ட வேலை முடிந்து, தோளில் மண்வெட்டியுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். இணுவில் ஆஸ்பத்திரிக்கு வட புறத்திலுள்ள அரச மரத்துக்கு அண்மையாக வண்டில் ஒன்று அவரைக் கடக்கிறது. உள்ளே யோகர் சுவாமிகள். விரைந்து சென்று சுவாமிகளை வணங்கினார் வடிவேலர். அவரைப் பார்த்த சுவாமிகள்.

"கிட்டவா, எங்கிருந்து வருகிறாய்?" என்றார்.

"தோட்டத்திலிருந்து" என்று விடை பிறந்தது.

"என்ன பயிர் செய்கிறாய்?"

"சாமி செய்கிறேன்"

"ஓ! உனக்குச் சாமியும் செய்யத் தெரியுமா?"

"ஆம், நன்றாகச் செய்வேன்." இவரின் விடையில் இருபொருள் இருந்ததைக் கேட்ட சுவாமிகள் -

"உம். என்னுடன் Logic பேசிறியா?" என்று கேட்டவாறு, அவர் உடுத்திருந்த வேட்டியைத் தனது கையில் எடுத்துக் கொண்டு, தெருவீதியில் வாலிபரைக் கோவணாண்டி ஆக்கிவிட்டார்.

வாலிபர் கவலையோ, வெட்கமோ எதுவுமின்றிச் சிரித்த முகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
நூலகம்

வண்டியின் பின்னே சென்றார். இந்நிலை இணுவில் கந்தசாமி கோவில் வாசல்வரை தொடர்ந்தது. வாலிபரின் குடிசை கோயில் வாசலுக்கு அண்மையில் இருந்ததால், அவ்விடத்தே அவரது வேட்டி திருப்பிக் கொடுக்கப்பட்டது.

அவர்கள் இருவரது சந்திப்பும், உரையாடலும் அன்றைய நிகழ்வும் வடிவேலுக்கு நிர்வாண தீட்சை ஆயிற்று. சுவாமிகளின் பரீட்சையில் வடிவேல் தேறிவிட்டார்.

ஆம். வடிவேலரை யோக சுவாமிகள் "சாமி" செய்துவிட்டார்.

**பக்தி வழிகாட்டல்**

வடிவேல் சுவாமிகளின் தோற்றப் பொலிவும், குரல் இனிமையும் அவரின் பன்னசாலைக்குப் பலரை அழைப்பதாயின் அடியார்கள் தனித்திருந்து தியானிப்பதற்கும், புராணபடனஞ் செய்வதற்கும் இடம்போதாதிருந்தது. இதனால் அடியார் கூடும் இடத்தை மஞ்சத்தடிக்கு மாற்றினார். இங்கே சொற்பொழிவு, கதாப்பிரசங்கம், பண்ணிசை, புராண படனம் போன்றவை ஒழுங்குற நடந்தன. மாலை வேளையில் அவ்விடம் பக்தி மயமாக விழாக்கோலம் பூண்டிருக்கும். நாயன்மார் குரு பூசைகளை அடியார்கள் போட்டி போட்டு முன்வந்து செய்தனர். சமயக் குரவர் நால்வரின் குரு பூசை நாட்களில் –

> "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
> இருக்கொடு தோத்திரம் இயம்பினார் ஒருபால்
> துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
> தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
> சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்..."

எனக் கூறுமளவுக்கு அவ்விடம் சிவமணம் கமழ்ந்து சிறப்புற்றிருக்கும்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே' என்னும் மந்திரமொழியைத் தெரிந்தவர். எனவே தனது பணியை பக்தி வழியில் செலுத்தியதோடு மற்றையோரையும் அவ்வழியில் ஈடுபடுத்தினார்.

நன்றி: வடிவேற் சுவாமிகள் மலர்

## அறவியல் நோக்கில் வள்ளுவம்

திருக்குறளைப் பலரும் பல்வேறு கண்ணோட்டத்துடன் பார்த்து வருகின்றனர். அதனை அறநூல் என்பர் பலர். சிலர் அரசியல் நூல் என்றும் வேறு சிலர் பொருள் நூல் என்றும் ஒரு சாரார் காமத்துப் பாலை முன்வைத்துக் காதலிலக்கிய நூல் என்றும் பலபடப் பகருவர். எவ்வாறாயினும் திருக்குறள் காலங் கடந்த பெற்றமையை உடையது என்பது உண்மை. எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் தனித்தன்மையைக் குறள் மட்டுமே கொண்டுள்ளது.

இன்றைக்கும் திருக்குறள் தேவைப்படுகிறது. அருங்குறளின் ஏனைய கூறுகளை விட அறவியல் நெறிகளே நடப்பியலுக்கு இன்றியமையாதன. அறவியல் நெறிகளைத்தான் வள்ளுவம் அடிநாதமாகவும் அடித்தளமாகவும் கொண்டுள்ளது. 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்றச் சங்கச் சொல்லாடல் குறளையே கருதிற்று என்பாரும் உளர். உயர்ந்த நீதி இலக்கியமாகக் கருதத்தக்க வள்ளுவத்தை அறவியல் நோக்கில் உணர்வது காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் ஒன்றியமும் அதன் செயற்பாடுகளும்

– பாக்கிய கந்தையா விவேகானந்தன்
(இணுவில் ஒன்றியத்தின் ஆரம்பகாலத் தலைவர்)

எமது ஒன்றியம் லண்டன் வாழ் இணுவை மக்களால் உருவாக்கப்பட்டது. அதற்கு அடித்தளம் இட்டவர் திரு.ஆறு திருமுருகன் அவர்கள். எமது ஒன்றியம் 2000ஆம் ஆண்டு தமிழ் முதல் மாதமான சித்திரை மாதம் LONDON BURNTOAK TOWN HALL மண்டபத்தில் திரு.ஆறு திருமுகனைப் பிரதம விருந் தினராக அழைத்து முதல் அங்குரார்பண கூட்டம் இணுவை மக்களால் நடத்தப் பெற்றது. அன்று அதன் பெயர் "பிரித்தானியா இணுவை மக்கள் ஒன்றியம்" ஆகும். தற்பொழுது அதன் பெயர் மாற்றம் செய்யப்பட்டு "இணுவில் ஒன்றியம் - U.K" ஆக அழைக்கப்படுகிறது.

எமது ஒன்றியம் ஆரம்பத்தில் இணுவிலில் ஒரு பெரிய பொது நூலகம் கட்டவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்துச் செயல்படத் தொடங்கியது. அதன் நோக்கம் கட்டப்படும் பொது நூலகம் தலைமை இடமாகவும், அதனுடன் சேர்த்து மடத்துவாசல் பிள்ளையார் கோவில் கணேசா வாசிகசாலை, பரமானந்த வாசிகசாலை, மஞ்சத்தடி வாசிகசாலை, சிவகாமசுந்தரி வாசிகசாலை, இளந்தாரிகோயில் வாசிகசாலை ஆகியவற்றை அந்தந்த இடங்களில் புதுப் பொலிவாக்கி இயங்கவைப்பது என்றும் அதற்கான 'யாப்பு' ஒன்றும் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால் சில காரணங்களால் அவ்எண்ணம் தடைப்பட்டு அவை தனித் தனியே இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதே நேரம் நாம் எடுத்த முயற்சிக்கு லண்டன் தொழில் அதிபர்களான திரு.குகவரதன் (குகன்) திரு.கருணாமூர்த்தி (ஐங்கரன்) இருவரும் இணுவில் குளக்கரைக் காணியை வாங்கித் தந்தார்கள். அக்காணியில் கட்டப்பட்டதுதான் இன்றைய **'அறிவாலயம்'**. அக்கட்டிடம் கட்டுவதற்கு கனடா "இணுவில் திருஊர்" ஒன்றியத்துடன் எமது ஒன்றியமும் இணைந்து லண்டன் வாழ் இணுவை மக்களின் உதவியுடனும், திரு.ஆறு திருமுருகனால் தனிப்பட்ட முறையில் சேர்க்கப்பட்ட பணத்துடனும் சேர்த்து கட்டி முடிக்கப்பட்டது. இந்த அறிவாலயத்திற்கு முதல் வித்து இட்டதும் லண்டன் இணுவில் ஒன்றியமே. கடந்த ஆண்டில் அதற்கு வண்ணம் (PAINT) தீட்டி அழகு படுத்தியுள்ளோம். தற்போது அறிவாலயம் புலம்பெயர் நாடுகளில் வாழும் இணுவை மக்களின் உதவியுடன் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேலும் எமக்குக் கல்விக் கண் திறந்த சைவப்பிரகாச வித்தியாசாலை (இந்துக் கல்லூரி), சைவமகாஜன வித்தியாசாலை (மத்தியகல்லூரி) ஆகிய இரு பாடசாலைகளுக்கும் வருடா வருடம் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிற்கு பணம் கொடுத்து ஊக்கம் அளித்தோம். தொடர்ந்தும், விட்டு விட்டும் கொடுக்க வேண்டியாதக அமைந்துள்ளது. ஆனால் கனடா திருஊர் ஒன்றியம் தன் உதவிகளைத் தொடர்ந்தும் செய்து வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது லண்டன் ஒன்றியம் இணுவை மக்கள் செறிந்து வாழும் ஐந்து இடங்களில் ஒன்று கூடல் நிகழ்ச்சிகளை நடத்தி இணுவில் தொடர்புகள், உறவுகள் என்பவற்றைப் பேணிவர நடவடிக்கை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. மேலும், "கற்பகவல்லி" புகழ் வீரமணி ஐயரின் மறைவையொட்டி அவருக்கு ஒரு நினைவு அஞ்சலிக் கூட்டம் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டு அப் பெருமகனுக்கு நன்றிக் கடன் செலுத்தப் பட்டுள்ளது. மேலும் தவில்மேதை தட்சணமூர்த்தியின் ஞாபகார்த்தக் கூட்டம் கலாநிதி நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

தற்பொழுது எமது ஒன்றிய நிர்வாகம் மாற்றி அமைக்கப்பட்டு இளையதலைமுறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வருங்காலங்களில் அவர்களின் செயற்பாடுகள் எமது ஊரின் பல வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுவாதக அமையும் என நம்பலாம்.

அவர்கள் லண்டன் வாழ் இணுவை மக்களின் சகல உதவிகளையும் பெற்றுத் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வார்கள் என்பது அசைக்க முடியாத உண்மை. அவை நிறைவேற எமது லண்டன் உறவுகளை அன்புடன் வேண்டி விடை பெறுகிறேன்.

"ஊருக்கு ஒரு பிடி, உன் உழைப்பில்" ★

## தொல்காப்பியத்தின் சிறப்பு:

உலகில் தோன்றியுள்ள இலக்கண நூல்கள் அனைத்தும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கூறுகின்றன. ஆனால் தொல்காப்பியம் மட்டுமே பொருள் இலக்கணத்தையும் சேர்த்துக் கூறுகிறது.

தொல்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பனவாகும். எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களையும், சொல்லதிகாரம் ஒன்பது இயல்களையும், பொருளதிகாரம் ஒன்பது இயல்களையும் கொண்டு மொத்தம் இருபத்தேழு இயல்களாக இயங்குகின்றது.

பொருள் இலக்கணம் என்பது வாழ்க்கை இலக்கணம். அந்தப் பொருள் இலக்கணத்தையும் அக இலக்கணம் என்றும் புற இலக்கணம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டும் இலக்கணம் கூறுகின்ற சிறப்பு வேறு எந்த இலக்கண நூல்களிலும் காண முடியாத அம்சமாகும்.

எழுத்து என்றால் என்ன? அவற்றை எவ்வாறெல்லாம் தமிழ்மொழியிற் பயன்படுத்திப் பெறலாம் என்பவற்றை விளக்கியுரைக்கும் பகுதியே எழுத்ததிகாரமாகும்.

சொல் என்றால் என்ன? அவற்றை எவ்வாறெல்லாம் தமிழ்மொழியிற் பயன்படுத்தலாம்? சொல் எவ்வாறு உருவாகின்றது? சொல்லுக்கு என்ன பொருள்? என்பதனை விளக்கியுரைக்கும் பகுதியே சொல்லதிகாரமாகும்.

எழுத்திலக்கணத்தையும், செல்லிலக்கணத்தையும் தெளிவாக உணர்ந்து கொண்டவன் படைக்கின்ற காவியங்களில் தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக் காக்கும் வகையினிற் படைத்திடுதல் வேண்டும் என்பதற்காகவே பொருளதிகாரத்தைப் படைத்தளித்தார் தொல்காப்பியர் என்பதே அறிஞர் சிலருடைய கருத்தாகும்.

தொல்காப்பியத்துக்கு முதல் முதலாக உரை எழுதியவர் இளம் பூரணர். இவரது உரையே எழுத்து - சொல் - பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் கிடைத்துள்ளது. இளம்பூரணர்க்குப் பிறகு பலர் உரை எழுதினாலும், இளம்பூரணரின் உரையே அனைவர்க்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது என்பதே சிறப்பாகும். தொல்காப்பியத்துக்குப் பிறகு எழுந்த நன்னூலின் ஆசிரியர் பவணந்தியார், இளம்பூரணரின் உரையைப் பின்பற்றியே நன்னூல் செய்தார் என்றால் இளம்பூரணரின் உரை எவ்வகைச் சிறப்பு வாய்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரித் தாயே!

- சி. அலைமகள்

இணுவைப் பதியின் இணையிலாக் கல்லூரி
இன்றமிழ் வளர்த்திடும் மத்திய கல்லூரி
சைவமும் மேன்மையும் ஊட்டி வளர்த்திடும்
சாதனை பற்பல பெற்றே உயர்ந்திடும்.

கவின் தமிழ் வளர்ச்சியும்
கல்வியில் மேன்மையும்
விளையாட்டுத் துறையில்
வியப்பான வெற்றியும்
புத்தாக்கச் செயற்பாட்டில்
புதுப்புது அறிமுகமும்
சித்திரப் போட்டியில்
சிறப்பான பரிசுகளும்
பெற்று நீ இன்று
வீறுடன் நடந்து
பேருடன் நிமிர்ந்தனையோ!

உன்னிடம் கற்றவர் உயர்ந்தனர் பதவியில்
பல்கலைக் கழகத்தில் பேராசிரிய ராய்
உடற்பிணி தீர்த்திடும் வைத்தியராக
அதிபராய்க் கல்வி சொல் நல்லாசிரியராய்
கணினித் துறையிலும் கலங்கரை விளக்குகளாய்
எத்தனை மாணவர் வர்த்தகர் ஆயினர்.

மாணவர் பல்லாற்றலை வளர்த்திடும்
மாண்புகள் நிறைந்த நல்லதிபரும்
கல்வியும் கலைகளும் கலாசாரமும்
கவினுற ஊட்டிடும் நல்லாசிரியர்களும்
பல்துறைத் திறமைகள் நிரம்பிடும்
பண்புடை மாணவச் செல்வங்களும்
உனைத் தெய்வம் போல் போற்றி
வளர்த்திட்டார் உள்ளம் உவப்படையுமன்றோ!


**நூற்றாண்டு விழாக் காணும்**
**இணுவில் இராமநாதன் கல்லூரி**

2013ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாக் காணவிருக்கும் இணுவில் இராமநாதன் கல்லூரிக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் **'இணுவில் ஒலி'** பெருமை கொள்கிறது.


# வாய்மொழி இலக்கியங்கள்

காலங்காலமாக பல தலைமுறைகளைக் கடந்து மக்கள் மத்தியில் இன்றும் இருந்து வரும் இலக்கிய வடிவங்களே வாழ்மொழி இலக்கியங்களாகும். எழுத்து வழக்கிற்கு முன்னர் இருந்து பேணப்படும் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், கதைகள் ஆகியன வாய்மொழி இலக்கியங்களாகும். இவற்றை நாட்டார் இலக்கியம் என்றும் அழைப்பார்கள். நாட்டார் இலக்கியம் செவிவழியாகவே தொடர்ந்து ஊருக்கு ஊர் மாறியும், நிலைத்து நின்றும் வழங்குவனவாகும்.

இவ்விலக்கியங்கள் எளிமையான பொருள் தருவதாயும், மரபு, வழக்காறு, பண்பாடு, பாரம்பரியம், நம்பிக்கை, தொழில், வேடிக்கை, விளையாட்டு, இலக்கியப் பண்பு, மொழி நடை அனைத்தையும் பிரதிபலிப்பனவாகவும் உள்ளன. அத்தோடு உள்ளதை உள்ளவாறு கூறுவனவாகவும் இருக்கின்றன. எதுகை மோனை, அடுக்குத்தொடர், இரட்டைக்கிவி போன்ற இலக்கண அம்சங்களோடு நாட்டார் இலக்கியம் செல்நெறி இலக்கியத்தோடு ஊடாட்டம் உடையதாகவுள்ளது.

நாட்டார் இலக்கிய வகைகளில் முக்கியமானது பாடல்களாகும். மனித வாழ்க்கையின் முக்கிய கட்டங்களில் இப்பாடல்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றைத் தாலாட்டுப்பாடல், குழந்தைப் பாடல், விளையாட்டுப் பாடல், காதல்பாடல், தத்துவப்பாடல், நகைச்சுவைப் பாடல், கேலிப்பாடல், ஒப்பாரிப் பாடல் என வகைப்படுத்தலாம்.

வாய்மொழி இலக்கியத்தில் பாடல்களைப் போல உபகதைகளும் இடம்பெறுகின்றன. கதை சொல்வதும் கேட்பதும் நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றன. குழந்தைகளைத் தூங்கவைக்க அவர்களின் அழுகையை நிறுத்த தாலாட்டுப் பாடல்களைப் பாடி வருகின்றனர். மேலும் வயல்களில் வேலை செய்யும் போதும், கரைவலையில் மீன்பிடிக்கும் போதும், பெண்கள் நெல் குற்றும் போதும் நாட்டார் பாடல்களைப் பாடுகின்றார்கள். மரணவீடுகளில் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்களும் வாய்மொழியாகவே இருந்து வருகின்றன.

கிராமப்புற மக்களிடையே இவை இன்று ஓரளவு நிலைத்து நின்றாலும், இளம் சமுதாயத்தினர் மத்தியில் இதன் செல்வாக்குக் குறைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன் கலை இலங்கு இணுவில்

- சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா.வசந்தக் குருக்கள் B.A(Hons)
லண்டன்

இணுவில் பற்றி அறிந்த சில தகவல்களைத் தருவதில் மகிழ்வடைகிறேன். வரலாற்றுத் தொடர்பிலும் வாய் வழி செய்தியாகவும் பல தகவல்கள் இணுவிலைப் பொறுத்தவரை உண்டு.

மன்னர்கள் முதல் கலைஞர்கள் வரை பலர் இணுவில் மண்ணுடன் தொடர்புடையவர்கள்.

"பேராயிரவரேனும் பேரரசைச் - சீராரும் கன்னல் வெறி வாழை கமுகு புடைசூழக் கழனி துன்னும் இணுவிலில் துலங்க வைத்து" என கைலாயமாலை அடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சவன்னத்தூது நூலில் அட்டலட்சுமி உறைந்தருளும் யாழ்ப்பாணப் பட்டினந்தனில் பரராசசேகரன் எனும் ஆரிய குலத்திறை அரசு வீற்றிருந்த தென் இணுவை எனுந் திருநகர் என்ற குறிப்பு காணப்படுகிறது. இவை இணுவில் மண்ணின் அரச தொடர்பைக் காட்டுவது மட்டுமன்றி அட்டலட்சுமி அருள் மூலம் ஆன்மீகத் தொடர்பையும் காட்டுகிறது. இன்றும் சைவக் கோயில்கள் பல சூழ்ந்த இடம் இணுவில்.

கலைத்தொடர்புகள் நிறைய உண்டு. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழின் ஊற்றுக்கள் ஊறிய ஊர். தமிழிலும் சைவத்திலும் வளர்ந்த ஊர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தவரான சின்னத்தம்பி புலவர் பாடலே முன் குறிப்பிட்ட பஞ்சவன்னத்தூது நூலில் உண்டு. இவர் கோவலன் நாடகம் அநிருத்தன் நாடகம் போன்ற நாடக நூல்களையும் இயற்றியுள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த நடராச ஐயர் தமிழ் வடமொழி இரண்டிலும் புலமை கொண்டவர். நாவலரிடம் கல்வி கற்றவர். வருடிய பரம்பரை இன்னும் இணுவிலில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நடராச ஐயர் தமிழ் நாடு சென்று பலருக்கு ஆசிரியராக விளங்கி இருந்தவர். சிவஞானசித்தியாருக்கு உரை எழுதியவர். ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் சைவர்கள் ஒருவரும் மதம் மாறாமல் இருந்த பெருமைக்கு உரிய ஊர் என்ற செய்தியும் இணுவிலுக்கு உண்டு.

உலகப்புகழ் பெற்ற கவிமாமணி வீரமணி ஐயர் அவர்களைத் தந்தது இணுவில் ஊர். வித்துவான் தட்சணாமூர்த்தி, சின்னராசா போன்ற கலைஞர்களை உலகத்துக்குக் காட்டிய ஊரும் இணுவில். அத்துடன் மணவறை, மாலை, காவடி மங்கள வாத்தியம், வேதியர் குருகுலம் என்ற சைவ வழிபாட்டுத் தொடர்பான கலைஞர்கள் வாழும் ஊர்.

இணுவில் ஊரில் கோயில் மணிகேட்டு கோழி கூவும் காலம் இருந்தது. தற்போதும் ஆலய மணிகள் அதிகாலையில் பலரை எழுப்பிவிடும். இணுவில் ராமநாதக் குருக்கள் வேத சிவாகம வழிபாட்டுக் கிரியை ஆற்றும் மிகச் சிறந்த குருவாக இலங்கையில் விளங்கி இருந்தார்.

வேத சிவாகமக் கல்வியை சிவஸ்ரீ தா. மாகதேவக் குருக்கள் நாற்பது வருடங்களுக்கு மேலாக தர்ம சாஸ்தா குருகுலம் என்ற வேதாகமப் பாடசாலையை நடாத்தி வருகிறார். இன்றும் மாணவர்கள் அங்கு தங்கி கல்வி கற்கின்றனர்.

எனவே இணுவை மண் பல் வேறு விதமான கலை வித்துக்களை உடைய மண். ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு அம்சம் இருந்தாலும், எல்லாவித கலை மூலங்களைக் கொண்ட ஊர் வாழ்க! 'இணுவில் ஒலி' ஒலிக்கட்டும். ★

## உங்கள் விருந்து

**'இணுவில் ஒலி'** பற்றிய உங்கள் கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம். அவை **'உங்கள் விருந்து'** என்ற பகுதியில் இடம்பெறும் என்பதை வாசகப் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருட்களை ஒழிப்போம் சுபீட்ச வாழ்வு காண்போம்

- குமாரசாமி தயாளினி
(யா/இணுவில் மத்திய கல்லூரி)

இன்று உலகில் வாழும் இளம் தலை முறையினரை தன் வலையில் வீழ்த்தி அவர்கள் வாழ்கின்ற வீட்டிலும், நாட்டிலும் பெரும் பிரச்சினையை உண்டுபண்ணுவன போதைப் பொருட்கள் ஆகும். இப் போதைப் பொருட்களால் மனிதன் தன்னி லையை இழக்கின்றான். அந்த வகையில் போதைப் பொருள் என்றால் என்ன? என்று நோக்கும் போது, "உடலிலும், உளத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும் இரசாயனப் பதார்த்தம் அனைத்தும் போதைப் பொருட்களாகும். மதுபானம், கஞ்சா, அபின், ஹெரோயின், கொக்கேன் என்பன குறிப்பிடத்தக்க சில போதைப் பொருட் களாகும்.

இன்றைய கால கட்டத்தில் மது போதைக்கு அடிமையாகின்றவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. புராதன காலத்தில் முதியோர், நோயாளர் என ஒரு சிலரே போதைப் பொருள் பாவனையாளர்களாக இருந்தனர். ஆனால் இன்று சிறுவர்கள், இளைஞர்கள் மட்டுமன்றி பெண்களும் மதுபோதைக்கு அடிமையாகியிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். மதுபோதையை நாம் விரும்புவதனால் அது எம்மை "வறுமை" எனும் பாதாளத் தில் தள்ளி உடல்நலத்தைக் கொடுத்து உறவுகளிலிருந்து விலக்கி மகிழ்ச்சிகர மான குடும்பத்தையும், வாழ்க்கையையும் சீரழித்து நடுத்தெருவில் நிர்க்கதியாய் அலையவிட்டு விடுகின்றது.

தற்போது போதைப் பொருள் பாவனை பாடசாலை மாணவர்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. பெற்றோர்களது அக்கறையின்மை, தீய நண்பர்களின் சேர்க்கை, போதை வஸ்துகள் இலகுவாகக் கிடைக்கும் தன்மை, சிறிய சிறிய பொட்டலங்களாகக் காணப்படுகின்றமை, சமூக விரோதிகள் வருமானத்தை ஈட்டும் நோக்கில் போதைப் பொருட்களை விற்பனை செய்கின்றமை போன்ற காரணங்களினால் அதனை மாணவர்கள் இலகுவாகப் பெற்றுப் பயன்படுத்தி தம் இனிய வாழ்வைக் கெடுக்கின்றனர்.

போதைப் பொருள் பாவனையால் உடல், உள ரீதியாக பல கெடுதிகள் உண்டாகின்றன. உடல் ரீதியான பாதிப்புக் களாக அழகு, வலிமை குன்றுதல், ஈரல், இருதய நோய்கள் ஏற்படுதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். மேலும் உளரீதியாக, பயம், விரக்தி, கோப மனப் பாங்கு ஏற்படுதல், நினைவிழக்கச் செய்தல், மன எழுச்சிகளை உண்டாக்கு தல் போன்ற பாதிப்புக்களைக் குறிப்பிட முடியும். இவ்வாறான காரணங்களால் மது மனிதனை மாய்க்கும் நஞ்செனக் கருதப் படுகின்றது. இதனைத் திருவள்ளுவர்,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

எனும் குறள் மூலம் வெளிப்படுத்து கின்றார்.

அடுத்து போதைப் பொருள் வகையான புகையிலை பற்றி நோக்கினால், இதில் காணப்படும் நிக்கோட்டின் எனப்படும் நச்சுப் பொருள் இருதயத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பையும் நேரடியாகப் பாதிக்கின்றது. இன்று உலகில் வாழும் அரைவாசிக்கும் மேற்பட்ட நபர்கள் சிகரெட், பீடி போன்வற்றைக் கூடுதலாகப் பாவிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து பாவிப்பதனால் உடல்நலம் குன்றி புற்றுநோய், நுரையீரல் நோய் என்பனவற்றிற்கு உள்ளாகித் துன்பமடைகின்றனர்.

மேலும், போதை வஸ்துவானது விஞ்ஞான வளர்ச்சியால் குளிசைகளாகவும். ஊசி மருந்தாகவும் தயாரிக்கப்பட்டது. இதனை அளவுக்கதிகமாக உட்கொண்டு மானிடர்கள் மரணத்தைத் தழுவுகின்றனர். ஒருவர் பயன்படுத்திய ஊசி மூலம் இன்னொருவருக்கு போதை மருந்தை ஏற்றும் போது எயிட்ஸ் போன்ற பல தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. இதன் மூலம் தாமாகவே தமக்குப் புதைகுழியினைத் தோண்டி விடுகின்றனர்.

மது விலக்கப்பட வேண்டியதொன்று என்பதனை வள்ளுவர்,

"உண்ணற்க கள்ளை உணிலுண்க
சான்றோரான்
எண்ணப்பட வேண்டா தார்"

என வெளிப்படுத்துகின்றார். போதை வஸ்து பாவனையை இல்லாதொழிப்பதற்கு சட்டங்கள் இறுக்கமானதாக்கப்பட வேண்டும். இதனை விற்பனை செய்பவர்களுக்குப் பாரபட்சமின்றி மரண தண்டனை வரை வழங்க வேண்டும். இதன் மூலம் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியும்.

போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளவர்களை சமுதாயத்திலிருந்து வெறுத் தொதுக்காது அவர்களை அன்புடன் அரவணைத்து நல் அறிவுரைகளை எடுத்துரைத்து புத்தி புகட்ட வேண்டும். இதன் மூலம் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

குடிபோதையின்றிய வாழ்வு குடும்ப நிம்மதியையும், ஆரோக்கியத்தையும் தரும் என்பதனை நன்கு புரிந்து கொள்வோமேயானால் மது போதை என்னும் அரக்கனை யாருமே நாட மாட்டார்கள்.

"குடியற்ற குடும்பம் என்றும்
நெறி பெற்று வாழும்"

எனும் வாசகத்தை நினைவில் வைத்து மதுபோதைப் பாவனையைத் தவிர்த்து வாழ்வோமானால் எதிர்காலம் சுபீட்சமான தாக அமையும் என்பதில் எந்த விதமான ஐயமுமில்லை! ★

**ஆத்மாவுக்கே அந்நியமாதல்:**

முதலாளித்துவத்தில் மனித இனம் தன் உழைப்பிற்கே அந்நியமாகிறது. தான் உற்பத்தி செய்த பண்டம் அவனுக்குக் கிடைப்பதில்லை. கூலி விவசாயி உணவு உற்பத்தியில் உழைத்தபோதும் அவனுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. பஞ்சாலையில் உழைத்த போதும் குடும்பத்துக்கு வேண்டிய உடைகள் கிடைப்பதில்லை. கல்வியிலும் தொழிலாளிக்கு விரும்பிய கல்வி கிடைப்பதில்லை. விரும்பி உற்பத்தியில் ஈடுபட முடிவதில்லை. கூலி உழைப்பில் ஈடுபடும் போதும் அவன் விரும்பிய உற்பத்தியில், தொழிலில் ஈடுபட முடிவதில்லை. கூலி உழைப்பு வேலைக்கு அலைந்து முதலாளி நிர்வகிக்கும் ஆலையில், தொழிலில் கூலிக்கு உழைக்க நேரிடுகிறது. தொழிலாளி காலம் பூராவும் உயிர்வாழ்வதற்காக விருப்பற்ற தொழிலில் உழைத்து தன் ஆத்மாவிற்கே அந்நியமாகிறான் என்பதைக் காண்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுப் பாரம்பரியம்

# இணுவில் மண்ணின் சிறப்பு

- ர.கபிலமி
யா/இராமநாதன் கல்லூரி

ஆதிகால வரலாறுடைய இணுவையூர் சைவத்திலும் தமிழிலும் வல்ல பேரறிஞர்களை அன்றுபோல் இன்றும் கொண்டு விளங்குகின்றது. இயல், இசை, நாடகமாகிய முத்தமிழிலும் சிறந்த இணுவில் திருவூரில் அன்று தொட்டு இயல்பாகவே சிவநெறியும், செந்தமிழும், ஆயகலைகளும் சிறந்து விளங்குகின்றன. இம் மண்ணில் தோன்றிய சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும், அருளாளர்களும், நாவலர் பெருமானின் அடியொற்றி நாடு நலன் பெற நல்லனவற்றை எல்லாம் எமக்குப் போதித்தனர்; வாழ்ந்தும் காட்டினர் யாவும் சிறப்புற்றது; அறம் வளர்ந்தது.

அந்நிய நாட்டவரின் படையெடுப்பினால் எமது சமய ஆலயங்களை யாவும் அழிக்கப்பட்டன. எமது மக்கள் இன்னலுற்ற போதும் மதம் மாறாது சைவத்தை அகத்தளவில் பேணிவந்தனர். இணுவில் கிழக்கில் வாழ்ந்த முத்தமிழ் வல்லுனரான இணுவில் சின்னத்தம்பி புலவர் என்பவர் குலதெய்வமான அன்னை சிவகாமியை தமது குன்றாத பக்தி மேலீட்டால் இடையறாது உள்ளன்போடு வழிபட்டு வந்தார். இவரின் கல்விச் சிறப்பினால், ஒல்லாந்தரின் அரச பணியில் இணைந்து "தோம்பு" எழுதும் பேறு பெற்றார். இவரின் பணிச் சிறப்பு மீது பொறாமை கொண்ட ஒருவன் கொடுத்த பொய்தகவலின் பெயரில் சமய பக்தரான புலவர் ஒல்லாந்தரின் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறை சென்ற புலவர் சிறையிலிருந்த வசதியீனங்களினால் பெரும் அவல நிலையை அடைந்து வருந்தினார். அன்னை சிவகாமியை மனமிரங்கி வழிபட்டார். இயற்கையாகவே கவிபாடு பவராகிய இவர் தமக்கேற்பட்ட துன்பத்திலிருந்து விடுவிக்குமாறு அன்னை சிவகாமியின் மீது ஒரு பதிகம் பாடினார். பாடல்கள் தொடர்ந்தன. ஏழாவது பாடல் தொடங்கியது. தன் பிள்ளையின் துன்பம் தீர்க்க எண்ணிய இணுவில் சிவகாமியம்மை தமது பேரருளினால் சிறைக்கதவின் பூட்டை தானாகவே உடையச் செய்தார். இச்செயலினால் அச்சமடைந்த அதிகாரிகள் புலவரை வணங்கி விடுதலை செய்தனர். தமது குல தெய்வத்தின் பேரருளை வியந்த சின்னத்தம்பி புலவர் தாம் பாடிய சிறைமீட்புப் படலத்தை பாடி நிறைவு செய்தார். மேலும் சிவகாமி பிள்ளைத் தமிழ், சிவகாமி அம்மைத்துதி ஆகியவற்றை அன்புடன் சிறப்பாகப் பாடி காணிக்கையாக்கினார். இச்சிறை மீட்பினால் இணுவில் சிவகாமி அம்பாளின் அற்புத மும் புகழும் ஓங்கின.

இக்காலத்தில் இணுவைக் கந்தப் பெருமானின் வேண்டுதலின் பேரில் உலகப் பிரசித்தி பெற்ற மிகப்பெரிய திருமஞ்சத்தினை பெரிய சன்னியாசியார் முன்னின்று உருவாக்கித் தந்தார். அம் மஞ்சம் அழகாக வர்ணிக்கப்பட்டு உலகப் புகழ் ஆனது. மஞ்சம் செய்த இடம் மஞ்சத் தடி ஆனது. அந்த இடத்தில் அமைந்த தலம் இன்று மஞ்சத்தடி முருகன் ஆலயமாக அழைக்கப்படுகிறது.

மக்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவது தெய்வ வழிபாடாகும். வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைச் செம்மைப் படுத்தும் செயற் பாடுகளில் சீர்மையைக் கொணரும். தோற்றத்தில் புதிய பொலிவைத் தரும். கொடையுணர்வைப் பெருக்கும். இதற்கு அடிப்படைச்சான்றாக இணுவில் கிராமம் விளங்குகின்றது. நமது முன்னோரது வாழ்வியல் இவற்றுக்குச் சான்றாக காணப் படுகின்றது. இவர்களினுடைய அனுபவம் வழிபாட்டின் பயன்களை எமக்கும், எமது ஊருக்கும் நன்றாக உணர வைத்துள்ளது.

இணுவில் கிழக்கில் சிவகாமி அம்பாள் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள 'இணுவில் சைவத்திரு நெறிக்கழகம்' மூலம் சைவசமயத்தை இளஞ்சிறார் களுக்குப் போதிப்பதன் பேரில் எமது ஆதரவில் சிவகாமி அறநெறிப் பாடா லையை நிறுவி சைவத்தின் பெருமை யையும், இணுவையம்பதியின் சிறப்பையும் புகழ் பெறச் செய்தோம். இவையாவும் எம்மண்ணில் தொடர்ந்து பிரகாசிப்பதன் பேரில் சிறார்களுக்கு நல்லறிவை புகட்ட முடிகின்றது. இத்திருத்தலத்தின் முன் னால் அறநெறி பாடசாலை ஆரம்பிக் கப்பட்டது. 1997ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை தனது பதினொராவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. இதன் வளர்ச்சியில் அனைத்து மக்களும் பங் கேற்று பயன் கண்டனர். இவ்அறநெறிப் பாடசாலையில் சமயநெறி கற்கும் மாணவர்களுக்கு உதவும் வண்ணம் சமய நூல்களை எழுதி வெளியிட இணுவை யம்பதியின் திருவருள் கை கூட்டியது.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய்

நிறைவாக எம் மாணவரும், மக்களும் சமய நெறியை நேசித்து எமது மண்ணின் பெருமையைப் பேணுவதற்கு இறையருள் பெருந்துணை நிற்க, உள்ளன்போடு இறை யருளைப் பெற்று பேறுபெறுவோம். ★

## தொன்மமும் இலக்கியமும்

இலக்கியத்தில் பயின்று வரும் தொன்மங்களை நோக்குவதற்கு முன்பாகத் தொன்மம் என்பது எது? எனப் பார்ப்பதும் அத்தொன்மமும் இலக்கியமும் கொண்டுள்ள உறவினை எண்ணுவதும் தேவையாகின்றன. தமிழில் புராணம் என்ற பழஞ்சொல்லையும் தொன்மத்திற்கான சொல்வடிவுகளாகக் கருதுவர். "தொன்மம்' என்ற சொல் பலருக்குத் திகைப்பையும் மலைப்பையும் தரலாம். 'புராணம்' என்ற சொல்லிருக்க எதற்காகத் 'தொன்மம்' என்ற வினா எழலாம். "தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்று தொல்காப்பியர் கூறியிருக்கப் புதிய சொல்லாக்கம் தேவையா? என்று சிலர் வியப்பாக நோக்கலாம். 'தொன்மை என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் புராணத்தைக் குறித்தது என்பது உண்மை தான். காலப்போக்கில் இச்சொல்லின் பொருள் 'பழமை' என்று மட்டும் பொருளுணர்த்தித் தான் சுட்டிய பெயரின் தனித்தன்மையை இழந்து விட்டது. 'தொன்மம்' என்ற சொல்லாக்கம் கருதிய பொருளின் கருத்துணர்த்தும் சொல்லாக உளது. பேரிலக்கியங்கள் எனப்பெறும் இதிகாசங்கள் யாவும் தொன்மங்கள் பலவற்றின் தொகுப்பாகும் என்பர். தமிழ்ச் சூழலில் கண்ணகி கதை, முருகன் பற்றிய கதையாடல்கள் யாவும் தொன்மங்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகள் வளர்க்கும் கலைக்கோயில்

எமது ஊரைச் சேர்ந்த திரு.சண்முகநாதன் பரமேஸ்வரன் அவர்களின் செல்வப்புதல்வி துர்கா பரமேஸ்வரன் அவர்களுடைய வாய்ப்பட்டு அரங்கேற்றத்திற்கு எமது பாடசாலையின் சார்பில் வாழ்த்துச் செய்தி அனுப்பிவைப்பதில் எமது பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் நிர்வாகிகள் அனைவரும் பெரு உவகை அடைகிறோம்.

செல்வி துர்கா அவர்கள் 2000ஆம் ஆண்டு முதல் ஞாயிறு காலை தோறும் நடைபெறும் எமது பாடசாலையில் தமிழ், சமயம், தேவாரம், வாய்ப்பாட்டு ஆகிய பாடங்களைக் கற்று வருகின்றார். இவர் இப்பாடங்களைக் கற்று வாய்ப்பாட்டில் கூடுதல் அக்கறை எடுத்து அரங்கேற்றம் பெறும் தரத்திற்கு வந்தமை இவரது விடாமுயற்சியாகும். இவர் இந்நாட்டில் பிறந்து வளர்ந்து வரும் இளம் மாணவி. எமது மொழி, சமயம், கலாச்சாரம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு பேணுவது எமக்கெல்லாம் பெருமையை கொடுக்கின்றது.

துர்காவின் குரு திருமதி கல்பனா செகராஜசிங்கம் அவர்கள் எமது பாடசாலையில் 1998ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்பாட்டு கற்பித்து வருகின்றார். இலங்கையில் தமது இசைக்கல்வியை படித்துப் பட்டம் பெற்றவர். எமது பாடசாலையிலேயே வாய்ப்பாட்டு ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தவர். இவர் தனது மாணவர்களது முன்னேற்றத்தில் மிக அக்கறையுடையவர் அதன் காரணமாக செல்வி துர்கா அவர்களது இசைத் திறனை முன் கொண்டுவருவதற்காக அரும்பாடுபட்டு தனது முதலாவது அரங்கேற்றத்தை நிறைவேற்றுவதற்குக் கடுமையாக உழைத்துள்ளார். குரு என்ற வகையில் அவரை நாம் பாராட்டுகின்றோம்.

எமது பாடசாலையில் தமிழ், சைவசமயம், தேவாரம், பாட்டு, வயலின், மிருதங்கம், சுரத்தட்டு, பரதநாட்டியம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வருகின்றனர். கடந்த 20 வருடங்களாக இயங்கி வரும் இப்பாடசாலை நான்கு மாணவர்களுடைய மிருதங்க அரங்கேற்றங்கள் மேடை ஏற்றியிருக்கின்றது. இவர்கள் அனைவரும் எமது மூத்த ஆசிரியர் திரு.R.N.பிரகாஸ் அவர்களுடைய மாணவர்கள் ஆவர். செல்வி துர்கா பரமேஸ்வரன் அவர்களது அரங்கேற்றமும் எமது பாடசாலையின் முதலாவது வாய்ப்பாட்டு அரங்கேற்றமாகும். எமது பாடசாலையில் இசைப்பாடங்களில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி அரங்கேற்றம் செய்தவர்கள் பலர் உள்ளனர்.

திரு.பரமேஸ்வரன் அவர்களின் தகப்பானர் திரு.சண்முகநாதனின் அன்னையார் திருமதி நன்னித்தம்பி அவர்களை எமது ஊரான இணுவிலில் **அம்மா** என்று எல்லோரும் அன்போடு அழைப்பார்கள். இவர் ஒரு தெய்வ பக்தி மிக்க பெண்மணியாவார். அவர்களது இல்லத்துக்கு அருகாமையில் உள்ள சிவகாமி அம்மன் ஆலயம் இவர்களது குல தெய்வக்கோவிலாகும். இவ்வாலயத்திற்கு தொண்டு செய்வதே இவரது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்துள்ளது. பல தொண்டுகளைச் செய்த இவ்அம்மையார் அக்கோவிலுக்கு இராஜ கோபுரத்தை நிறுவி எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது அவசியம்.

பேத்தியாரைப் போன்று திரு.பரமேஸ்வரன் அவர்களும் சமயப்பணியில் ஈடுபட்டு இலண்டன் சிவன்கோவில் வளர்ச்சிக்குப் பலவழிகளில் பெரும் தொகையான நன்கொடைகளை வழங்கியுள்ளார். அத்துடன் எமது பாடசாலை மாணவர்களுக்கு நடனம் கற்பிப்பதற்கு உகந்த வகுப்பறை இல்லாத பொழுது பணஉதவி புரிந்து ஆவன செய்துள்ளார். இச்சந்தர்பத்தில் இவற்றை நினைவு கூருவதும் பொருந்தும் என எண்ணுகிறோம்.

நன்றி : அரங்கேற்றமலர்

**Lewisham Tamil School**

Incorporating
London School of Carnatic Music
Based at London Sivan Kovil

நடராசா சிவசோதி (அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறார் கல்விச் சிந்தனைகள்: ஒரு நோக்கு

- இணுவையூர் த.சிவசுப்பிரமணியம் -

'எல்லோருக்கும் கல்வி' என்ற கோட்பாடு முன்னெடுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகளை உலகெங்கும் செயற்படுத்த முனைந்திருக்கின்ற நிலையில் கல்விக்கான சிந்தனைகள் பல கல்விமான்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் சில அறிஞர்கள் தமது இலக்கியப் படைப்புகளின் வாயிலாக முன்வைக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்விச் சிந்தனைகள் எவ்வாறு அமைத்திருக்கின்றன என்பதை அறியமுயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குழந்தைகளுக்கான உளவியல் மயப்பட்ட கல்வி இயக்கத்தின் நவீன சிற்பிகளுள் ஒருவராக மொன்ரிசோரி அம்மையார் விளங்குகிறார். குழந்தைகளை நடுநாயகப்படுத்திய கல்வி முறையில், புலன்களுக்கான பயிற்சிகளின் முக்கியத்துவத்தை அம்மையார் வலியுறுத்தினார். அதாவது பொருத்தமான முறையில் குழந்தைகளின் புலன்களுக்குப் பயிற்சி தந்தால் அவர்கள் அறிவில் மேம்பாடு அடைந்து கொண்டு செல்வார்கள் என்பதை அவர் கண்டறிந்தார்.

கற்பித்தலில் குழந்தை உளவியலின் பிரயோகத்தை முன்னெடுத்த கல்வியாளர்களுள் அம்மையார் தனித்துவம் பெறுகின்றார். மறைபொருளாய் அகத்தே மலர்ந்துள்ள குழந்தையின் உள்ளத்தை வளப்படுத்தும் ஆற்றல்மிக்க கருத்துக்களை அம்மையார் முன்மொழிந்தார். அவரின் குழந்தைக் கல்வி இயக்கம் உலக நாடுகள் எங்கும் விரைந்து பரவலாயிற்று.

இலங்கையிலும் இக்கருத்துக்கள் படிப்படியாகப் பரவலாயின. யாழ்ப்பாணத்தில் வேம்பஸ்தானில் அமைக்கப்பட்ட பாலர்கல்வி நிலையத்திலும், பின்னர் றிம்மர் மண்டபத்தில் அமைக்கப்பட்ட பாலர் கல்வி நிலையத்திலும் அம்மையாரின் குழந்தைக் கல்விக் கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொடர்ந்து கிறிஸ்தவ தனியார் பாடசாலைகளிலும் பாலருக்கான கல்வி வகுப்புகள் நடைபெற்றுவரலாயின.

குழந்தைகளின் கல்வியில், அவர்களால் திரட்டிக் கொள்ளப்படும் மொழி விருத்தியானது சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. "எந்தப் பாடத்தையும், எந்தப் பிள்ளைக்கும், எத்தகைய விருத்திப் படிநிலைகளிலும் அறிவுசார் நேர்மையான அமைப்பில் கற்பிக்கலாம்" என்று குழந்தை உளவியல், குழந்தைக் கல்வி, அறிகை உளவியல் முதலாம் துறைகளில் அதீத ஈடுபாடு கொண்ட ஆய்வாளர் புறூனர் விளக்கியுள்ளார்.

"குழந்தைக் கல்வியில் பேச்சுக்கு முக்கியத்துவம் வழங்குதல், பேச்சுக்குப் பின்னரே எழுத்தைக் கற்பித்தல் ஏற்புடையது" என்று சிறுவர்களுக்கான உளவியல் மயப்பட்ட கல்விச் செயற்பாடுகளை முன்மொழிந்தவரான பெஸ்ட லோசி என்பவர் தெளிவு படுத்தியுள்ளார்.

"குழந்தைக் கல்வி என்பது ஒரு மகிழ்ச்சி தரும் பூங்காவாகவும், உற்சாகம் தரும் நந்தவனமாகவும் இருத்தல் வேண்டும்" என்ற இலட்சியப் போக்கைக் கொண்டிருந்த பிரெட்ரிக் புரொபல் குழந்தைகள் கல்வியிலும், குழந்தைகளுக்கான பிரயோக உளவியல் புலத்திலும் தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

மேற்கூறப்பட்ட கல்வியலாளர்களின் கல்விச் சிந்தனைகள் பொதுவாக முன்னெடுத்து வருகின்ற காலகட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகளை நோக்குவோம். தென் இந்தியாவைப் பொறுத்தளவில், தமிழகத்திற் செயற்பட்டுக் கொண்டிருந்த ஆங்கிலக் கல்வி முறையும், புதுச்சேரியில் இயங்கிக் கொண்டிருந்த பிரெஞ்சுக் கல்விமுறையும் சிறார் தொடர்பான அணுகுமுறையில் புதிய புலக் காட்சிகளை ஏற்படுத்தின. சிறார் அனைவருக்கும் கல்வி, சிறார்க்குரிய கற்பித்தல் உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், இலக்கிய ஆக்கம் முதலாம் துறைகளில் மேலெழுந்த முன்னேற்றங்களை பாரதியார், பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை அழ.வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர் முதலானவர்களின் ஆக்கங்களிலே காணமுடியும். அவை தமிழ் மொழிக் கல்வியின் ஊட்டத்திற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளன.

பாரதியார் வாழந்த காலத்தில் இந்தியக் கல்வி முறையிலே நன்கு இனங்காணக் கூடியதான இருவகைத் தன்மைகள் காணப்பட்டன. ஒருபுறம் வளமான கட்டுமானங்களுடன் கூடிய ஆங்கிலக் கல்வி ஒழுங்கமைப்பு, மறுபுறம் நலிவுக்கு உள்ளாக்கப்பட்ட சுதேசக் கல்வி முறை. இந்த முரண்பாடுகளை விளங்கியும் உணர்ந்தும் பாரதியார் தமது சிந்தனைகளை முன்னிறுத்தினார். அவ்வகையில் சிறப்பாக சிறார் கல்விச் சிந்தனைகள் முகிழ்த்தெழுந்தன.

தமிழகத்து மக்களின் கல்விப் பங்குபற்றல் பின்னடைந்த நிலையில் இருப்பதைக் கண்ட பாரதியார் 'விதி' என்ற தமது கட்டுரையில் தெளிவாக அதைச் சுட்டிகாட்டினார். கல்விப் பரவலும், பங்குபற்றலும் சிறார் கல்வியிலிருந்தே கால்கோள் கொள்ளல் வேண்டுமென்று அவர் கருதினார். **தாய்மொழியை ஊடகமாகக் கொண்ட கல்வியே பயன்மிக்க கல்வியாகவும், வினைத்திறன் கொண்ட கல்வியாகவும், சிறார்களிடத்தே கூடிய விளக்கத்தை ஏற்படுத்தும் கல்வியாகவும் அமையும் என்பதில் அவர் அக்கறை கொண்டிருந்தார். அத்துடன் சிறார்க்கான கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் அவர் முன்வைத்தார்.**

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பணம் படைத்தோர் ஆங்கிலக் கல்வியைக் கற்று அந்நியமயப்படுத்திக் கொண்டிருந்த அவலங்களை கண்டு "ஆங்கிலம் ஒன்றையே கற்றார். அதற்கு ஆக்கையோடு ஆவியும் விற்றார். தாங்களும் அந்நியர் ஆனார்" என்று துணிந்து எழுதினார்.

பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் ஏழ்மைக்கும் கல்விக்குமிடையேயிருந்த இடைவெளியைத் தமது பட்டறிவு வாயிலாக அறிந்து கொண்ட பாரதியார்...

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

சிறார்கள் வீரமும் உறுதியும் கொண்டவர்களாக மலர்ச்சி கொள்ள வேண்டும் என்பது பாரதியாரின் குழந்தைக் கல்விச் சிந்தனைகளுள் மேலோங்கிய வீச்சாக அமைந்திருந்தது.

"அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்" என்பதும்

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"
என்ற வரிகளும்

"பாதகம் செய்பவரைக் கண்டால் – நீ
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

ஆகிய கருத்துக்களை உதாரணத்திற்குக் கொள்ளலாம்.

சிறுவர்களது ஆளுமையைத் துலங்க விடாது தடுத்தும், அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்று பலவீனப்படுத்தியும், அவர்களின் புத்தாக்கத் திறன்களை முறியடித்தும் வந்த கல்விச் சூழலுக்கு எதிரான கிளர்ச்சியாக பாரதியாரின் கல்விக் கருத்துக்கள் முன்எழுந்தன.

பாரதியாரின் குழந்தைக் கல்விச் சிந்தனைகள் பாப்பாப் பாட்டில் உரத்து வெளிப்படுகின்றன. குழந்தைகளுக்கான

பொது்சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்டத்தில் கற்றல் அழகியற் செயற்பாடுகள் - விளையாட்டு ஆகியவை ஒன்றிணைத்தலின் சிறப்பை பின்வரும் பாடலில் விளக்கியுள்ளார்.

"காலை எழுந்தவுடன் படிப்பு
பின்னர் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா"

பாரதியாரின் குழந்தை கல்விச் சிந்தனைக்குள் முகிழ்ந்தெழும் பிறிதொரு விசையாகக் காணப்படுவது அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டும் நெறியாகும். மேலும் அறக் கல்வி, ஒழுக்கக் கல்வி பாரதியாரின் சிறார் கல்விச் சிந்தனைகளிலே பரக்கக் காணப்படுகின்றன.

"பொய் சொல்லக் கூடாது"
"புறம் சொல்லலாகாது"

என்ற வரிகள் அதை உணர்த்தி நிற்கின்றன.

மேலும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றை நேரடியாக உணர்த்திக் கற்பித்தல் வேண்டுமென அவர் விரும்பினார்.

"தமிழ்த்திரு நாடுதனைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"

என்ற பாடல் அதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

ஒரு கவிஞர் என்ற நிலையிலும், ஒரு ஆசிரியர் என்ற பாத்திரத்திலும் நின்று தமிழ் மரபில் சிறார் கல்விச் சிந்தனைகளை முன்மொழிந்தவர்களுள் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் தனித்துவமானவர். பறவைகள் மற்றும் விலங்குகளை குழந்தைகள் விழித்துப் பேசும் பொழுதும், பாடும் பொழுதும் குழந்தைகளின் கற்றல் ஈடுபாடு தீவிரமடையும் என்பது புலவரின் கருத்தாக அமைந்தது.

"காக்காய்! காக்காய்! பறந்துவா,
கண்ணுக்கு மை கொண்டுவா;
கோழி! கோழி! கூவிவா,
குழந்தைக்குப் பூக் கொண்டுவா!"

என்னும் பாடலை இங்கு எடுத்துக் கூறலாம்.

"தாம் காணும் காட்சிகளை எளிமையான முறையில் விபரித்துக் கூறும் திறன்களை வளர்த்தல் என்ற கலைத்திட்டச் செயற்பாடு சிறார் கல்வியிலே முன்னெடுக்கப்படல் வேண்டும் என்ற கருத்தும் கவிமணியிடம் நிலை கொண்டிருந்தது. தோட்டத்தில் நிகழும் காட்சியை பின்வரும் கவிதையில் தந்துள்ளார்.

"தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி"

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை பேச்சுத் தமிழின் இயக்கப் பண்பை நன்கு அறிந்தவர். சிறாரின் அறிகையை வளர்ப்பதில். பேச்சுமொழி வலிமைமிக்க ஊடகமாகும் என்பதை அறிந்த அவர் சிறார் கவிதைகளிலும், கட்டுரைகளிலும், உரையாடல்களிலும் பேச்சுமொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்தினார்.

குழந்தை இலக்கியங்கள் வாயிலாகச் சிறார்க்குரிய கல்விக் கருத்துக்களைத் தமிழ்க்கல்வி மரபில் முன்மொழிந்தவர்களுள் அழ.வள்ளியப்பா அவர்கள் விதந்து குறிப்பிடத்தக்கவர். தேசப்பற்று, மொழிப்பற்று, நல்லொழுக்கம், இயற்கை நயப்பு முதலாம் சிந்தனைகளைக் குழந்தைகளின் உளக்கோலங்களுக்கு ஏற்றவாறு எளிமையாகக் கற்பிக்க வேண்டுமென்பதே அழ.வள்ளியப்பாவின் கருத்தாக அமைந்தது. சிறார்க்கான அறிவூட்டல், நகைச்சுவையுடன் இணைந்த மனவெழுச்சி சார்ந்த கற்பித்தலாக இருத்தல் வேண்டுமென்ற கருத்தும் இவரிடத்து இழையோடியிருந்தது. மிக எளிமையான அனுபவக் கட்டமைப்பிலிருந்து இவரது குழந்தைக் கவிதைகள் முகிழ்த்தெழுகின்றன.

"அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா
கொய்யா மரம் ஏறிவா
குண்டுப் பழம் கொண்டுவா"

சிறார்க்கு நாட்டுப்பற்றுடன் கூடிய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாய்மொழி வாயிலான கல்வி இன்றியமையாதது என்பது இவரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்மரபில், சிறப்பாக ஈழத்துச் சிறார் கல்விமரபில் பல்வேறு கல்வியியற் சிந்தனைகளைத் தமது கவிதைகள் வாயிலாக உதிர்த்தவர்களுள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தனித்துவமாகக் குறிப்பிடத்தக்கவர். இலங்கையில் இலவசக் கல்வி விரிவாக்கம் பெற்ற காலகட்டத்தில் சிறாரை நடுநாயகப்படுத்தும் கல்வி நோக்கங்கள் முனைப்புப் பெற்ற பின்புலத்தில் இவரது பங்களிப்பைக் காணலாம். சோமசுந்தரப்புலவர் அவர்களது சிறார் கல்விச் சிந்தனைகள் இயற்பண்புநெறி தழுவி மலர்ச்சியடையத் தொடங்கின. சிறாருக்கான கற்பித்தலில் குழவிப் பாடல்களின் முக்கியத்துவம் சோமசுந்தரப் புலவரினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறார் கல்வியில் குழுநிலைக் கற்பித்தல், குழுச்செயற்பாடு முதலியனவும் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதை புலவர் தமது குழந்தைப் பாடல்களிலே தந்துள்ளார்.

சிறார் இலக்கியப் பரப்பில் தடம் பதித்த பெருங்கவிஞர்கள், தங்கள் பாடல்கள் மூலம் சிறார் கல்விச் சிந்தனைகளை முன்வைத்து கற்றலுக்கு வழிகாட்டியுள்ளார்கள். இதன் முக்கியத்துவத்தை நம்மவர்கள் உணர்ந்து சிறாரின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவோமாக! ★

## கல்வியில் மறுமலர்ச்சி

"அறிவு அற்றம் காக்கும் கருவி" அறிவை வளர்ப்பது கல்வி. அழிவே இல்லாத பெருமைக்குரிய செல்வம் கல்வியாகும். பள்ளிக் கூடங்கள் கல்வி தரும் ஆலயங்களாகத் திகழவேண்டும். ஆசிரியர்கள் மரியாதைக்குரிய ஆசான்களாகப் பணியாற்றுவது மாணவர் மத்தியில் குருபக்தியை வளர்த்துவிடும். அவர்களால் வழங்கப்படும் கல்வி நிலைத்த கல்வியாக அமையும். அரசு, கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தும் போது மாணவர்களின் பாடச்சுமை, எதிர்காலமுன்னேற்றம், வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சிந்தித்துச் செயற்படுத்துவதே சாலச் சிறந்தது. திட்டமிட்ட செயற்பாடு மூலம் மேல்நாடுகளை விடத் தரமான கல்வியை வழங்க முடியும்.

ஒழுக்கம், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள், மன்றச் செயற்பாடுகள், ஆரோக்கியம் பேணுதல், செயல்முறைக் கல்விகள், சமூக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பரிசளித்துப் பாராட்டுதல் போன்ற நெறிமுறைகள் மாணவர்களை ஊக்கப்படுத்த உதவும் என்றே சொல்லலாம். பாடசாலைகள் மாணவர்களின் திறனறிந்து அறிவியல் வழியிலும் கணினித் தொழில்நுட்பத்திலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு வழியிலும் உதவுவதை நோக்காகக் கொள்ள வேண்டும்.

ஆரம்ப நிலையிலும், இடைநிலையிலும், மேல்நிலையிலும், பல்கலைக்கழக நிலையிலும், பணிப்பயிற்சி நிலையிலும் வழங்கப்படும் உண்மையான கல்விச் சேவை மாணவர்களை மாண்புள்ளவர்களாக மாற்ற உதவும். இயற்கைச் சூழலில் இருந்து பிரிக்கமுடியாதவர்களாக மாணவர்கள் இருப்பதால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மரம் வளர்த்தல், காட்டு வளம் காத்தல் போன்றவற்றிலும் ஊக்கமுடையவர்களாக உணர்த்தப்படுதல் அவசியம்.

சிந்தித்துச் செயலாற்றி கல்வியில் முன்னேற்றகரமான மறுமலர்ச்சியைக் காண உழைப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகுமென உணர்த்தப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாட்டில் இணுவில் மக்களின் பங்களிப்பு

**- இணுவை சண்முகநாதன் சிறீரங்கன் -**
**(அறங்காவலர், ஈலிங் ஶ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன்)**

எங்கள் தொப்புள் கொடி உறவுகளான இனிய இணுவில் மக்களுக்கென ஆரம்பிக் கப்பட்ட இணுவில் ஒன்றியம் தன்னாலான பணிகளைச் செய்ய ஆரம்பித்திருக் கின்றது. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்ற கவிமணி தேசிய விநாயகம்பிள்ளையின் கூற்றுக்கிணங்க 'பிறந்த நாடு' என்று கூறுவதன் முன், அந்நாட்டின் ஓர் அங்கமான கிராமம் முன்வருவது தவிர்க்க முடியாமலுள்ளது. "உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று" என்பது பழமொழி. இக்கூற்றினை அடிப்படை யாகக் கொள்ளும்போது, ஓர் நாட்டின் உட்சுவராகிய கிராமத்தினைச் செழிக்க வைப்பது, அக்கிராம மக்களின் தலையாய கடமையாகின்றது. கிராமம் செழித்தால், நாடு செழிப்படையும். நாடு செழிப்படையும் போது கிராமமக்களும், நாட்டு மக்களும் ஒருங்கிணைந்து பொலிவடைவர். "வரப்புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும்..." என்ற ஔவை வாக்குப்படி கிராமம் உயர, கிராம மக்கள் உயர் வடைவர். கிராம மக்கள் உயர்வடைய, எமது விழுமியங்கள் மேலோங்கும். விழுமியங்கள் மேலோங்க, தமிழும், தமிழர் பெயரும் சிறந்தோங்கும்.

இணுவில் தாயின் புதல்வர்களால் நாட்டப்பட்ட ஒன்றியத் தாயின் செடி, இன்று கொடி விட்டுப் பரவ ஆரம்பித்திருக் கின்றது. இக்கொடியில் பூத்து காய்களாகி, முற்றிப் பழுக்கின்ற கனிகளின் சுவையை, எமது இணுவில் மக்கள் மட்டுமன்றி, இணுவில் தாயின் அரவணைப்பை நாடி வந்திருக்கும் சகல கிராமமக்கள் அனை வருமே சுவைக்கப் பேசிகின்றனர். இந்த ஒன்றியத்தில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வேறுபாடின்றி, எமது தாயின் புதல்வர்கள் நீக்கமறச் சங்கமமாகி யுள்ளனர்.

'இணையிலி' என்ற 'இணையில்லாதது' எனப்படும் சொற்பதமானது, 'இணுவில்' என உருமாற்றம் பெற்று, மருவியதாகவும், நாளடைவில் அது 'இணுவில்' என்றழைக் கப்பட்டதாகவும் பழைய செய்திக் குறிப் பொன்று தெரிவிக்கிறது. விவசாயத்தில் கலைத்துறையில், கலாசாரத்தில், இனிய உபசரிப்பில், விருந்தோம்பலில் இணை யில்லாதது 'இணுவில்' கிராமமாகின்றது. இவ் இணையில்லாத தன்மையை, இலண்டனில் பரவியுள்ள எம் உறவுகள் பறைசாற்றி வருகின்றனர். **"அந்நிய நாட்டவர் படையெடுத்து வேற்று மதம் பரவி சில இடங்களில் சைவசமயம் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டபோது, பிறமதக் கலப்பின்றி, சைவத்தை இணுவில் மக்கள் காப்பாற்றினார்கள்"** என்று ஆறுமுகநாவலர் எழுதிய கட்டுரை யொன்று சான்றுபகர் கின்றது.

இலண்டனில் சிவன் ஆலய அறக் கட்டளையை ஆரம்பித்த திரு.நடராசா சச்சிதானந்தன் அவர்கள், சிவன் ஆலயம் தோற்றம் பெற, மூலவராக நின்று பலரை இணைத்துப் பணியாற்றியுள்ளார். இவரைப் போலவே திரு.கந்தையா விவேகானந்தன் அவர்கள், ஈழபதீஸ்வர ஆலயத்துடன் இணைந்து, ஓர் அறங்காவலராக, பணிகள் பலசெய்துவருகின்றார். இந்த ஆலயத்தில் இணைந்து, தற்போது இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கைச் சேர்ந்த திரு.கதிர்காமு மாணிக்கவாசகரும் பணிகள் பல ஆற்றிவருகிறார்.

லண்டனில் கலை வளர்ச்சிக்காக திரு.பதஞ்சலி நவேந்திரன் ஆற்றும் பணியையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். இளங்கலைஞர்களை ஒருங்கே சேர்த்து, 'வின்ஸ்ரன் சர்ச்சில்' மண்டபத்தில், மிக அண்மையில், 'கர்நாடக இன்னிசை மாலை' என்ற நிகழ்வை திரு.நவேந்திரன் நடாத்தியமை, பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது. 'ஐங்கரன் - இன்ரநாஷனல்' என்ற பெயரில், பிரபல வர்த்தகராக வளர்ந்துள்ள திரு.கருணாகர மூர்த்தி (கருணா) அவர்கள், இணுவில் கிராமத்தின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி, ஏனைய கிராமங்களின் அபிவிருத்திக்கும் இங்கு பணிசெய்வது, இணுவில் கிராமத்துக்குக் கிடைத்த பெருமையென்றே கூற வேண்டும்.

இக்கட்டுரையை எழுதும்போது, இணுவில் தாயின் மைந்தன் திரு.ஆறுதிரு முருகன் அவர்கள், திருச்செந்தூர் கந்தஷஷ்டி நோன்பு காலத்தில், தொடர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ள செய்தி எமக்கெல்லாம் மிக்க பெருமையைத் தருகின்ற செய்தியாகும். இணுவில் மண்ணின் பெருமை எங்கும் பிரகாசிக்கட்டும். ★

## பலம்தரும் பழங்கள்

உடலின் ஆரோக்கியத்தைப் பேணுவதில் பழங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தினசரி பழங்கள் சாப்பிட்டால் நோய்கள் நம்மைத் தாக்காது. மருத்துவரை நாடவேண்டியிருக்காது என்கின்றனர் உணவியல் நிபுணர்கள். பழங்களில் உள்ள உயர்தர ஊட்டச் சத்துக்கள், உயர்ந்த நார்ச்சத்து தாது உப்புக்கள் நம் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. தினசரி பழங்கள் உட்கொள்ள வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

உலக அளவில் நடைபெற்ற பல்வேறு ஆய்வுகளின் மூலம் பழங்கள் சாப்பிடுவதன் நன்மைகள் தெரிய வந்துள்ளது. பழங்கள், காய்கறிகளை உண்பதன் மூலம் இருதய நோய்ப் பாதிப்பு ஏற்படுவதில்லை. உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதில்லை என்றும், உடல்பருமன் கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் உணவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

காலை உணவில் கண்டதையும் உண்பதைவிட பழங்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது. வாழைப்பழம் ஊட்டச்சத்து மிக்கது. டின்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் பழச்சாறுகளில் உடலுக்குத் தீங்கு ஏற்படக்கூடிய இரசாயனங்கள்தான் அடங்கியுள்ளன. புதிய பழங்களைக் கொண்டு நாமே தயாரித்து அருந்தும் பழச்சாறுதான் நல்லது. இதில் அடங்கியுள்ள நார்ச்சத்து உடலின் ஜீரண சக்தியை அதிகரிக்கவல்லது. அதிகளவில் நார்ச்சத்து உள்ள உணவுகளை உட்கொள்ளுபவர்களுக்கு இதயநோய், நீரிழிவு, உடற்பருமன் போன்ற நோய்கள் தாக்குவதில்லை என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே பழங்களை நிறையச் சாப்பிடுங்கள். உடல் ஆரோக்கியத்தை பேணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் முக்கியத்துவம்

*- கமலநாதன் ஆருண்யா*
*தரம் 8, யா/இணுவில் மத்திய கல்லூரி*

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற பொய்யாமொழிப் புவலரின் குறளிற் கிணங்க கல்வி என்பது எமது வாழ்வை உயர்த்துவது. அக்கல்வியானது இவ் இருபத்தொராம் நூற்றாண்டில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றது. ஆனால் முன்னைய காலத்தில் காட்டினுள் வாழ்ந்த மனிதன் ஏட்டினைத் தூக்க மறந்தான். காலம் நகர நகர ஏடு எடுத்தான். புரட்டிப் புரட்டிப் பார்த்தான். வளர்ந்தது அறிவும் ஆற்றலும்; விரிந்தது நவீன உலகம். பரந்து கொண்டே வருகின்றது பலவித கண்டுபிடிப்புக்கள். காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் இன்று அறிவியலின் சாதனைகள் எண்ணில் அடங்காது. மனிதன் மண்ணையும் மாகடலையும் வெற்றி கண்டதோடு அமையாது விண்வெளியையும் புறம்கண்டு பிற கோள்களுக்குச் செல்ல முன்னேறினான்.

இவ்வாறு மனித வாழ்க்கையில் புறத்துறையனைத்திலும் அறிவியல் நல்லதொரு சேவகனாய், நண்பனாய் அமைய இன்றைய கல்வி முறைதான் காரணம் என்றால் யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இன்றைய மாணவர்கள் தமது கல்வியை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் துணை புரிவது நூல்களே. கல்வி எனும் தீபம் உலகில் ஏற்றப்பட்ட காலத்திலேயே அதனை அணையவிடாது நெய்யிட்டு, ஒளிபெறச் செய்த பெருமை நூல்களையே சாரும். மாணவர்களது கல்வியை வளர்த்துக் கொள்ள தேடல் அவசியமாகும். தேடிக் கற்றல் என்பது இன்றைய கல்வி முறையின் பிரதான நோக்கமாகும். கற்றறிந்த அறிஞர்கள் கண்டறிந்த உண்மைகளை காணக்கூடிய இடம் நூல் நிலையம். நூல் நிலையம் மூலம் தேடிக்கற்று கல்வியை விருத்தி செய்யலாம்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல'

என இடித்துரைக்கிறது நாலடியார். சிற்றறிவுடைய மாந்தர் எல்லையற்ற கல்வியை முற்றாகக் கற்க முடியாதென்பது இதன் பொருளாகும். எனினும் பரந்துபட்ட இக்கல்வியை சிற்றளவேணும் கற்று சிந்தையிலிருத்துவது சாலச் சிறந்தது. அறிவுச் செல்வத்தைச் சிரத்தையுடன் தேடும்போதே மாணவரின் கல்வி செழிப்படைகிறது. எனவே மாணவர்களாகிய நாம், கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து எம்மால் முடிந்தளவு கல்வியை சிறப்புடன் கற்போம்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" ★



**முகப்பு அட்டையில்....**

**இணுவில் தாயின் குழந்தைச் செல்வங்களுக்குக் கல்வியை வழங்கும் கல்விக் கூடங்கள்:**

- **இணுவில் இராமநாதன் கல்லூரி**
- **இணுவில் மத்திய கல்லூரி**
- **இணுவில் இந்துக் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யோகாசன அனுபவ உண்மைகள்



**இணுவையூர் அ.ஆ.நா.இ.க.பத்மநாதன் (ஜேர்மனி)**

அன்பு, கருணை, முயற்சி, நிறைந்த வாசகர்களுக்கு பணிவான வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு நான் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அனுபவ ரீதியான உண்மைகளை தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். "எறும்பூரக்கற்குழியும் மெல்லனப்பாயும் தண்ணீர் கல்லையும் உருவிச்செல்லும" இது வழக்கத்திலுள்ள பழமொழிகள். எறும்பின் நடையினாலும் தண்ணீரின் ஓட்டத்தாலும் கல் தேய்ந்துபோக முடியுமாகில் மனிதரால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை உணரலாம். பெரிய காரியம் என்பது ஒவ்வொருவரும் தங்கள் உடல் ஆரோக்கியத்தையும் திடகாத்திரமான மனோநிலையையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அந்த விடயத்தை அனுபவித்தவர்கள் பயனடைந்தவர்கள் காலங்காலமாக வெளிப்படுத்தி வருகிறார்கள். **'ங'** போல வளை என்றார் ஔவையார். ஓடிவிளையாடு பாப்பா என்று பாராதியாரும், யோகாசன பிரணாயாமம் செய்து யோகவாழ்வு வாழுங்கள் என்று திருமூல சித்தரும் மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார்கள். திருமூலர் தனியாக ஆரோக்கியத்தை மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினரை விவேகமுள்ளவர்களாக குறையற்றவர்களாக எப்படி உருவாக்குவது என்பதையும் மிக இலகுவான முறையில் தெரியப்படுத்தியுள்ளார். இதைவிட இன்று பயனடைந்த பலர் (ஒரே விடயமாக இருந்தாலும்) தங்கள் அனுபவத்தை பல புத்தகங்களாக வெளியிட்டுள்ளார்கள். திருவள்ளுவர்கூட ஒரு விடயத்தை பத்துப்பத்துக் குறள்களாக எழுதியதன் காரணம் பலமுறை சொன்னால்த் தான் மனமானது கேட்கும் என்பதற்காக.

யோகாசனம் ஒரு சமயம் சார்ந்தவர்களுக்குரியதன்று. எல்லாச் சமயங்களிலும் ஏதோவொரு விதத்தில் யோக நெறியை பின்பற்றுகிறார்கள். சைவநெறிமரபில் கொஞ்சம் கூடுதலாகப் பின்பற்றுகிறார்கள் எனலாம். கோயிலுக்கு போய் கும்பிட்டால் நன்மை ஏற்படும் என்பார்கள். எல்லாச் சமயத்தவரும் தங்கள் கோயிலுக்குப் போய் வணக்கத்தை ஏதோஒரு யோகாசன முறையில் தான் செலுத்துகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. பின்னர் அவர்களுக்கு சிறிதளவாவது மனதில் திருப்தி ஏற்படுகிறது.இதையும் மறுப்பதற்கில்லை. அட்டாங்க பங்சாங்க வணக்கம் இந்து சமய வணக்கமுறையில உள்ளது அத்தனையும் யோகாசனங்களே. கிறிஸ்தவர்கள் முழங்காலில் நின்று (உசட்டாசனம்) வணக்கம் செலுத்துகிறார்கள். இஸ்லாமியமக்கள் வச்சிராசனம் மாகமுத்திரா ஆகிய ஆசனநிலையில் தங்கள் தொழுகையை செய்கிறார்கள். யோகாசனம் மானிடர்க்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடி வாழலாம். ஆனால் இப்படி வாழ்ந்தால் அனேக நன்மை, சுகம், திருப்தி, ஆனந்தம், நிறைவு ஆகியன ஏற்படும் என்பது உண்மை.

யோகாசன பிரணாயாமங்களை அநேகர் விரும்பினாலும் அதை மேற்கொள்வதற்குத் தயங்குகிறார்கள். காலைக் கையை மடக்க வேண்டும். அதை இதை விட வேண்டும், கட்டுப்பாடுகள் அதிகம் என எண்ணுகிறார்கள். பயிற்சியை ஆரம்பித்து இரண்டு மூன்று கிழமைகள் செய்துவர தேவையற்றவை அனைத்தும் தானாகவே விலகுவதை உணரலாம். நான் மன நிறைவுடன் வாழவேண்டும் என திடசங்கற்பம் பூண்டால் மற்றயவை அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு துரும்பாகிவிடும். மனதில் நான் இன்று யோகாசனம் செய்ய ஆரம்பித்துவிட்டேன் என நினைத்து செய்யத் தொடங்கியவுடன் மனதில் இருபத்தைந்து விகிதம் உச்சாகமும் சந்தோசமும் பிறப்பதை தாங்களே உணராலாம். தொடர்ந்து முயற்சித்தால் மனதில் வைராக்கியம் பிறக்கும், தேடல் ஆரம்பிக்கும், பல புதிய அனுபவங்கள் கிடைக்கும். தனிய உடல் ஆரோக்கியத்துக்கு மட்டும் அல்லாமல் உள்ளம், சிந்தனை, செயற்பாடு போன்றவற்றிலும் ஒரு தெளிவு பிறக்கும்.

எல்லோரும் எல்லா ஆசனங்களும் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. ஒவ்வொருவருடைய உடல் அமைப்புக்கு ஏற்றாற்போல் இலகுவான ஆசனங்களைத் தெரிவு செய்து கிரமமாக பயிற்சி செய்தால் வியக்கத்தக்க மாற்றங்களைக் காணலாம். காலை, மதியம், மாலை ஆகியவற்றில் தாங்கள் விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்யலாம். அல்லது ஒருநாள் காலை மறுநாள் மதியம் மறுநாள் மாலை எனவும் பயிற்சியை மேற்கொள்ளலாம். இவையெல்லாம் எதற்குச் செய்ய வேண்டும்? சகல அங்கங்களுக்கும் சுத்தமான குருதி சென்றடைய வேண்டும். உடல் ஆரோக்கியத்திற்கு யோகாசனம். குருதியைச் சுத்தப்படுத்த பிரணாயாமம் (மூச்சுப்பயிற்சி).

யோகாசனத்தால் நன்மை உண்டு ஆரோக்கியம் பெருகுமென ஓரிரு வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது. தற்காலத்தில் வாழ்க்கை முறை உணவு முறை ஆகியவற்றால் அனைவரும் ஏதோ ஓர் வகையில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். மனதளவில், உடலளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மன அழுத்தம், அதிக கோபம், எதையும் முடிவெடுக்க முடியாதநிலை, மூட்டுக்கள் வலி, செமிபாடின்மை, மூச்சுத்திணரல், மூல வியாதி போன்ற கடுமையான வியாதிகளை நெருங்க விடாமல் தடுத்துவிடலாம். யோகாசனத்தை இரண்டு வயதிலிருந்து ஆரம்பிக்கலாம். முதன்முதலில் ஆரம்பிப்பவர்கள் தொகுக்கப்பட்ட இலகு ஆசனங்களை ஆரம்பித்து பழக்கப்படுத்திக்கொண்டு பின்னர் விரும்பிய ஆசனங்களை பழக முயற்சிக்கலாம். அல்லது சூரிய நமஸ்காரத்தை முறைப்படி பயின்று தினமும் காலைவேளையில் குறைந்தது ஐந்து முறை செய்துவர நல்ல பலன்கள் கிடைக்கும். அதனால்தான் இதையே அட்டாங்க நமஸ்காரமாகச் சேர்த்துள்ளார்கள். சூரிய நமஸ்காரத்தை பெண்களும் செய்து பழகலாம்.

இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலை ஒத்துவருகுதில்லை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் சூரியநமஸ்காரத்தை பழகுவதற்கு மட்டும் கொஞ்சம் கூடுதலான நேரம் தேவைப்படும். பழகிவிட்டால் ஒருநமஸ்காரம் செய்ய ஒருநிமிடம்கூடத் தேவையில்லை. தினமும் ஐந்து நிமிடங்களை ஒதுக்கினால் சூரிய நமஸ்காரம். அத்துடன் இன்னும் ஒரு ஐந்து நிமிடங்களை ஒதுக்கினால் பிரணாயாமம் (மூச்சுப்பயிற்சி) இவற்றை கிரமப்படுத்தினால் மன நிறைவைத் தாங்களே அனுபவிப்பீர்கள். சூரிய நமஸ்காரத்தில் முக்கிய யோக ஆசனங்களே சேர்க்கப்பட்டுள்ளது.

உடம்பின் மகத்துவம் பற்றி திருமூலரின் கூற்று.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே
(திருமந்திரம் – 724)

உடம்பினை முன்னம் இழுக்குஎன்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான்என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே
(திருமந்திரம் –725)

யோகாசனத்தின் அற்புதத்தை வெளிப்படுத்தும் திருமூலரின் ஒரு பாடல்.

அஞ்சனம் போன்று உடல் ஐ அறும் அந்தியில்
வஞ்சக வாதம் அறும் மத்தியானத்தில்
செஞ்சிறு காலையில் செய்திடில் பித்தமறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே.
(திருமந்திரம் – 727)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியநமஸ்காரம்**

இது ஏழு ஆசனங்களினால் ஆன ஒரு தொகுதி. இதில் ஐந்து ஆசனங்கள் இரண்டு முறையும் இரண்டு ஆசனங்கள் ஒரு முறையும் செய்தால் சூரிய நமஸ் காரத்தைப் பழகிவிடலாம். இதை செய்யும் போது மூச்சுப்பயிற்சியுடன் சூரியனுக்குரிய பெயரையும் நினைத்துக் கொண்டால் மன நிறைவுடன் சூரியநமஸ்காரத்தைப் பூரணப் படுத்தி விடலாம். தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால் சொல்லில் விபரிக்க முடியாது. அதை அனுபவித்துத் தெரிந்து கொள்ளலாம்.

**பிரணாயாமம்**

இதைத் தினமும் தனியாகவும் செய்து கொள்ளலாம். ஆசனங்கள் சூரிய நமஸ்காரம் செய்த பின் இறுதியாகவும் செய்து கொள்ளலாம். இதை சுகாசனம் (சப்பாணி) பத்மாசனம் போன்றவற்றில் அமர்ந்து செய்யலாம். அப்படி இருக்க முடியாதவர்கள் நாற்காலி சொகுசு இருக்கை போன்றவற்றில் அமர்ந்தும் செய்யலாம். நாம் சுவாசிக்கும் மூச்சை ஒழுங்குபடுத்துதல் தலையின் பின் பகுதி (பிடரி), முள்ளந்தண்டு, இடுப்பு ஆகியன நேராக இருந்த நிலையில் சுவாசம் மூக்கினால் நடைபெறுகிறதா என அவ தானிக்கவேண்டும். முதலில் உள்வாங் கப்பட்ட மூச்சை முற்றாக வெளியேற்றி விட்டு வலமூக்கை ஒரு விரலால் மூடியவாறு மெதுவாக இடமூக்கால் நன்றாக மூச்சை உள் இழுத்து பின்னர் இடமூக்கை முடியவாறு மெதுவாக வலமூக்கால் மூச்சு முழுவதையும் வெளி விடவும். பின்னர் அதே வலமூக்கால் மூச்சை நன்றாக இழுத்து வலமூக்கை அடைத்துக்கொண்டு இட மூக்குத் துவாரத்தால் மெதுவாக வெளிவிடவும். இப்படிச் செய்தால் ஒரு பிரணாயாமம் என கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி தினமும் குறைந்தது ஐந்து முறையாவது செய்ய வேண்டும். இது முதற்படி. இதை 2, 3 கிழமைக்குத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதன் இரண்டாவது படி நிலையாக மூச்சு இழுக்க எடுத்த நேரத்தைப்போல் இரு மடங்கு நேரம் மூச்சை வெளி விடுவதற்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த இரு நிலைகளும் பூர்த்தியாக்கப் பட்டதும் மூன்றாவது படி நிலையை முயற்சிக்கலாம்.

தினமும் ஒரு சொற்பவேளை இதைச் செய்துவந்தால் நாளடைவில் பழக்கம் ஏற்பட்டுவிடும். இதையே சைவசமயத்த வர்க்குத் தீட்சை கொடுக்கும் போது மந்திரத்துடன் பயபக்தியோடு செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் மகத்துவம் அறியாமல் இதுவரை காலமும் இருந்துவிட்டோம். இதை மற்றவர்களும் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். ★


**இணுவில் ஒலி - சந்தா விபரம்**

**தனிப்பிரதி – ரூபா 50/=**

**ஒரு வருடச் சந்தா – ரூபா 500/= (அஞ்சல் செலவுடன்)**

**வெளிநாடு – $ 25 (U.S.) (அஞ்சல் செலவுடன்)**

**உங்கள் 'இணுவில் ஒலி'யின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர் களாகச் சேர்ந்து ஆதரவு நல்லுங்கள்.**

தொடர்பு :-

| | |
|---|---|
| த.சிவசுப்பிரமணியம். | சி.சரவணபவன். |
| 9-2/1. நெல்சன் பிளேஸ். | 47, கருணாகரப் பிள்ளையார் வீதி. |
| கொழும்பு - 06. | இளந்தாரி கோவிலடி. |
| இலங்கை. | இணுவில் கிழக்கு. |
| தொ.இல: 0114902406 | சுன்னாகம். |
| 0718676482 | இலங்கை. |
| | தொ.இல: 077 3126802 |


**வாசக நெஞ்சங்களே!**
**மாணவச் செல்வங்களே!!**

உங்கள் **'இணுவில் ஒலி'** அடுத்த இதழ் (தை-மாசி 2013) ***பொங்கல் சிறப்பு மலராக*** மலரவிருக்கின்றது. உங்கள் ஆக்கங்கள் இடம் பெறவேண்டாமா? உடனும் உங்கள் ஆக்கங்களை **'இணுவில் ஒலி'**க்கு அனுப்பிவையுங்கள்.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளின் சங்கமம்

# லண்டன் வாழ் இணுவை மக்களின் நிகழ்வுகள்

தொகுப்பு - லண்டன் விவேகானந்தன்

**அரங்கேற்றம்.**

இணுவில் மேற்கு பொன்னம்பலம் சிவசுப்ரமணியம்(சிவம்) - சத்தியபாமா தம்பதியினரின் செல்வப் புதல்விகளின் இசை அரங்கேற்றம். 01 - 09 - 2012 சனிக் கிழமை, மலை 6 மணி அளவில் லண்டன் "பெக்ஸ் தியேட்டர்" மண்டபம் நிரம்பிய நிலையில் அரங்கேற்ற நிகழ்வு கலாநிதி நித்தியானந்தன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் செல்வி பைரவி வயலின், செல்வி ஆரவி புல்லாங்குழல், செல்வி சயந்தவி வீணை. மூன்று பெண் பிள்ளைகளும் தாம் குறைந்தவர்கள் அல்ல என்ற வித்துவத் தன்மையைக் காட்டி தமது திறமைகளை வெளிபடுத்தி மக்களின் அமோக கைதட்டலுடன், வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் பெற்றனர். இது எமது ஊருக்கு கிடைத்த பெருமை யாகும்.

**இசை அரங்கேற்றம்**


இணுவில் தெற்கு தெட்சாணமூர்த்தி சண்முகவடிவேல் - கவிதா தம்பதியினரின் செல்வப் புதல்வர்களின் இசை அரங் கேற்றம் 22 - 09 - 2012 சனிக்கிழமை மாலை 06 மணி அளவில் லண்டன் "பெக்ஸ் தியேட்டர்" மண்டபத்தில் இசை பிரியர்கள், மத்தியில் அரங்கேற்ற நிகழ்வு அரங் கேறியது. நிகழ்வுக்குக் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமை தாங்க இருந்தார். சில தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் சமூகம் அளிக்க முடியாத நிலையில், திரு.நாதமணி முத்து சிவராஜா தலை மையில் நடைபெற்றது. செல்வன் சாருகன் மிருதங்கம், செல்வன் மிதுனன் வயலின் இவர்கள் இருவரும் தமது அபார திறமை களை அரங்கேற்றி அனைவரதும் பாராட்டுக்களையும், ஆசீர்வதங்களையும் பெற்றனர். சிவ ஸ்ரீ சர்வேஸ்வர(வசந்த) குருக்கள் ஆசியுடன் அரங்கேற்றம் இனிதே நிறைவு பெற்றது. இணுவை மண்ணுக்குக் கிடைத்த மற்றுமொரு பெருமை.

**எழுபதாவது அகவை விழா**

இணுவையில் புகழ் பூத்த சிவாச்சாரியார் சிவஆகம கிரியாஇரத்தின சிவ ஸ்ரீ இராம நாத குருக்கள் - இராசம்மா அம்மையார் தம்பதியினரின் புதல்வர் சிவஸ்ரீ ஸ்ரீதர குருக்கள் ஐயாவின் எழுபதாவது அகவை விழா கடந்த 27 - 09 -2012 வியாழன் காலை லண்டன் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. இந்தச் சாந்தி விழா, தவில் நாதஸ்வர மங்கள வாத்தியங்கள் முழங்க லண்டன் ஈஸ்ரோன்லி அம்மன் ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ விஸ்வநாத குருக்கள் தலைமையில் ஆரம்பமாகியது. லண்டன் முருகன் ஆலய பிரதமகுரு கைலை சிவ ஸ்ரீ நாகநாதசிவ குருக்கள், லண்டன் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு சைவசித்தாந்த பண்டிதர் வசந்தக் குருக்கள் ஆகியோரின் நெறி ஆள்கையில் ஸ்ரீ ஐயா தம்பதிகளுக்கு, யாகம், திருக்காப்பு, அபிசேகம், கும்ப பூஜைகள் போன்ற பல வேத ஆகம கிரியை கள் நடைபெற்று எழுபது அகவை விழா இனிதே நிறைவுபெற்றது. லண்டனில் உள்ள அனைத்து ஆலய குருமார்களும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்த குருமாரும், ஐயாவின் அன்புக்குப் பாத்திரமான அநேக அன்பு உள்ளங்களும் கலந்துகொண்டு ஆசீர்வாதங்கள், வாழ்த் துக்கள், வாழ்த்துமடல்கள், பரிசுப் பொருட்கள் கொடுத்து விழாவைச் சிறப் பித்தனர். ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுவிருத்திப் பணிகளில் இணுவில் பொதுநூலகம் சனசமூகநிலையம் ஓர் முன்மாதிரி




ஒரு சமூக அலகாக 1948ஆம் ஆண்டு, சுதந்திர இலங்கையில், ஒரு சிறிய ஓலைக் கொட்டிலிலே "ஸ்ரீகணேசா வாசிகசாலை யாக" ஆரம்பிக்கப்பட்டு, கிராமத்து பரம்பரை முன்னோடி வழித்தோன்றல் களின் முயற்சியினால் இன்று இணுவில் பொதுநூலகமாக வளர்ச்சி அடைந்திருக் கின்றது. கடந்த ஐம்பதுக்கு மேற்பட்ட சாதனைமிகு வருடங்களில் அதன் பாதை யில் பல சமூக அரசியல் மாற்றங்களை யும், பல தலைமுறைகளையும் கடந்து புதியதொரு செழுமைமிகு சமூக மாற்றங் களுக்கும் அது வித்திட்டு இருக்கின்றது.

1967ஆம் ஆண்டு இலங்கையின் கல்வி நூற்றாண்டின் நிறைவையொட்டி நூறு புதிய பாடசாலை நூலகங்கள் நிறுவப் பட்டன. இது சிறுவர்களின் ஆரம்ப வாசிப்புப் பயிற்சிக்கும், சிறுவர் இலக்கிய தோற்றங்களுக்கும் வித்திட்டதோடு பாடசாலை மட்டத்திலே வாசிப்புக் கலாசாரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்று கூறலாம். இணுவில் பொது நூல கத்தைப் பொறுத்தவரை அதன் சிறுவர் வாசிப்புப்பகுதி, சிறுவர் இலக்கியத் தேவை களை ஓரளவிற்காயினும் நிவர்த்தி செய்வ தோடு நூலகங்களே இல்லாத கிராமியப் பாடசாலைமட்ட மாணவர்களுக்கு ஒரு தன்னிறைவை ஏற்படுத்தியிருக்கின்றது என்று பெருமையுடன் கூறலாம்.

பொதுவாக வாசிப்பு என்பது வாசிப்ப வரினது ஆற்றலிலும், வாசிப்பதற்கான வசதிகளிலும்தான் பெரிதும் தங்கியிருக் கின்றது. குட்டிக் குட்டிக் கதைகளை பாட்டியிடம் செவிவழி கேட்ட குழந்தைகள் அடுத்து அதனை சுயமாகவே நிறைவு செய்துகொள்ளவேண்டிய ஒரு நிலைக்கு வரும்போது அவர்களுக்கு வேண்டிய நூல்கள் கிடைத்தல் வேண்டும். இளமை யில் சிறார்களிடையே ஏற்படுத்தப்படும் வாசிப்புப் பழக்கமானது அவர்களின் ஆளுமையை விருத்திசெய்வதோடு தொடர்ந்தும் அறிவுத்தேடலின் ஒரு முயற்சியாக புதியபுதிய நூல்களின் தேவைகளுக்கும் வாசிப்புக்கும் ஒரு உந்து சக்தியாக அது அமையும். "மனிதனின் ஆளுமைக்கு வாசிப்பு அவசியம். படிப்பை வாசிப்பு என மயங்கிவிடல் கூடாது. யாழ்ப்பாணம் ஒரு பழக்கும் சமுதாயமே தவிர வாசிப்பு வீச்சுள்ள ஒரு சமுதாயம் என்று கூறிவிட முடியாது. சமூகநோக்கில் வாசிப்புக்கு ஊக்கம் தருவதில்லை." என்று குறிப்பிடுகின்றார் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். இணுவில் பொது நூலகத்தைப் பொறுத்தவரை அதன் கவர்ச்சிகரமான "பருவஇதழ்களின்" வாசிப்புப்பகுதி பெரிய அளவிலான ஒரு வாசகர் வட்டத்தையே உருவாக்கியிருக்கின்றது என்று கூறலாம்.

சு.உத்திரன்

யாழ்ப்பாணம் பொதுநூலகம் உட்பட பல நூலகங்கள், பிரதேசங்கள் தோறும் எழுச்சிபெற்று வருகின்றன. இங் கெல்லாம் புத்தகங்களை இரவல் எடுத்து வாசிக்கலாம்! பொருளாதாரச் சிக்கல்கள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்களுக்கு எல்லாம் இணுவில் பொதுநூலகம் போன்ற இந்த நூலகங் கள் ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால் இப் போது உள்ள பிரச்சினையெல்லாம் வாசிப்பை உற்சாகப்படுத்த வேண்டிய அவசியத்தில் தான் பெரிதும் தங்கியிருக் கின்றது. வாசிப்புப்பழக்கம் இப்போது மக்களிடையே மிகவும் அரிதாகி வரு கின்றது. முக்கியமாகத் தொலைக்காட்சி யின் ஆதிக்கம் இந்த வாசிப்பைப் பெரிதும் பலவீனப்படுத்தியிருக்கின்றது என்று கூறலாம்.

இணுவில் பொதுநூலகமானது தனது குறிக்கோளை அடையும் பொருட்டு வாசிப்பின் முக்கியத்துவத்தை மக்களி டையே எடுத்துச்செல்லும் ஓர் அரிய பணியில் ஈடுபட்டு வருகின்றது. தற்போது மக்களிடையேயான வாசிப்புப்பழக்கம் மிக மிக அரிதாகிக்கொண்டு வருகின்றது. காலையிலே எத்தனைபேர் ஒரு பத்திரிகை யைப் பார்க்கவேண்டும் என்று நினைக் கின்றார்கள்.??? நிறைய வாசிக்க வேண்டும்.! வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். ஒரு மனிதன் பெறுகின்ற பரந்த அறிவையும், பக்கு வப்பட்ட உள்ளத்தையும் வெறும் பள்ளிக் கூடக் கல்வியில் இருந்து மட்டும் பெற்று விட முடியாது. அறிவு என்றால் சூழ் நிலைக்கு தக்கபடியான ஓர் நடத்தை என்றுதான் அர்த்தப்படுத்தப்படுகின்றது. இந்த அறிவையும், அனுபவத்தையும் நாம் பெறவேண்டுமானால் வாசிக்கவேண்டும். பரந்த அறிவையும், சிந்தனை ஆற்றல் உள்ள ஓர் சமுதாயத்தையும் நாம் கட்டி யெழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். ஆகவே அதற்காக பரந்தளவில் பெரிய ஓர் வாசகர் வட்டத் தையே உருவாக்கவேண்டிய அரிய பணியில் நூலகமானது தன்னை அர் பணித்துள்ளது.

இணுவில் பொதுநூலகமானது இணு விலையும் அதனைச் சூழஉள்ள கிராமத்து மக்களின் நலன் கருதியும் உருவாக் கப்பட்ட ஓர் ஸ்தாபனமாகும். இந்தப் பிரதேசத்திலே தரமான ஓர் நூலகம் இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு புலம்பெயர்ந்து வாழும் அன்பர்களின் உதவியோடு இந்த நூலகம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. இந்த நூலகமானது கல்வி, கலை, கலாசார, சமய, இலக்கிய, சமூக, அறிவியல், மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளோடு, விளையாட்டுத் துறையிலும் இப்பிர தேசத்தில் வாழும் மக்களை ஒரு உன்னத மான நிலைக்கு இட்டுச்செல் வதையே தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டு ள்ளது. இந்த இலட்சியப் பயணத்தை நோக்கியே தனது பாதையை வகுத்துக் கொண்டும் உள்ளது.

இணுவில் பொதுநூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இது ஆரோக்கியமான ஓர் விடயமாகும். அதேவேளை வாசகர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவேண்டிய ஒரு பாரிய பொறுப்பும், கடமையும் நூலகத்திற்கு இருக்கின்றது. இந்தத் தேவைகள் கவனத் தில் கொள்ளப்படவேண்டும். வாசகரின் தேவையே முக்கிய தேவையாகும். இந்த நூலகத்தில் வாசகர்கள் தம்மை ஒரு அங்கத்தவராக இணைத்துக்கொள்வதன் மூலம் நூல்களை இரவல் எடுத்துச்செல்ல முடியும். தவிர எந்த ஒரு குடிமகனும் இங்குள்ள படிப்பகத்தல் இருந்து வேண்டிய நூல்களை எடுத்து வாசிக்க முடியும். அதோடு இங்கு மாணவர்களின் நலன் கருதி பாடம் படிப்பதற்கான ஒரு படிப் பகமும் (Study Hall) உருவாக்கப் பட்டுள்ளது.

இணுவில் பொதுநூலகமானது வாரத்தில் ஏழு நாட்களுமே காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை திறந்தி ருக்கும். இங்கு எல்லாவிதமான பத்திரிகை களையும், சஞ்சிகைகளையும் வாசிக்க லாம். குடாநாட்டில் இருந்து வெளியா கின்ற, வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகியவற்றுடன் கொழும்பில் இருந்து வெளிவருகின்ற வீரகேசரி, மித்திரன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி, தினமுரசு, தினகரன், SundayTimes, Sunday Observer, The Island, போன்ற அனைத்துப் பத்திரிகைகளையும் படிக்கமுடியும். இது தவிர மாலை வேளைகளில் தினமும் 04 மணிமுதல் 07 மணிவரையான காலப்பகுதி யில் எந்தவொரு சிறுவர் சிறுமிர்களும் இங்குள்ள சிறுவர் பூங்காவில் உற்சாக மாக விளையாடுவதன் மூலம் குதூகல மாக தமது பொழுதை களிக்கலாம். இவையெல்லாம் நூலகம் ஆற்றிவருகின்ற இலவச சேவைகள் ஆகும். இவை மட்டுமல்ல சுனாமி நிதி சேகரிப்பில் இருந்து மயானத்துப் பற்றை வெட்டுவது வரை நூலக அங்கத்தவர்கள் தமது சேவையை விரிவுபடுத்தி வருவது இங்கு ஒரு சிறப்பம்சம் ஆகும்.

இந்தப் பொதுநூலகமானது தற்போது சிறுவர்களுக்கான குட்டிக்கதைப் புத்தகங் கள், மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள், பாடநூல்கள், கணினி கல்வி சம்மந்தமான கற்கை நெறிகளுடன் கூடிய நூல்கள், சமூக, இலக்கிய, அரசியல் நூல்கள், சோதிட இதிகாச புராணங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப கற்கை நெறிகள், உளவியல், தத்துவ சிந்தனையாளரின் நூல்கள், மற்றும் சிறுகதை, கவிதை, நாவல்களை உள்ளடக்கிய சுமார் பதினையாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போது சிறுவர்நூலகம் ஒன்றும் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு இருக் கின்றது. தவிர இணுவில் பொதுநூலகத் தில் கணினிப்பிரிவு ஒன்றும் உருவாக் கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இணைய வாசிப்பு தொழில்நுட்ப வசதியும் (e.Library சேவை) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட வலைத்தளங் களுடாக உலகத்தையே படிக்கத்தக்க இணைய சேவையில் வாசகர்கள் இணைந்து கொள்ள முடியும். இங்கு சிறுவர்களுக்கான கணினிப்பயிற்சிகளும், மாணவர்களுக்கான பயிற்சி நெறியும் பயிற்றுவிக்கப்படுகின்றது. அத்தோடு சிறுவர்களுக்கான விளையாட்டு உப கரணங்களைக் கொண்ட பிரத்தியேக விளையாட்டுப்பகுதி ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது.

நூலகமானது கருத்தரங்கு மண்டபம், கலாசார மண்டபம், சிறுவர் மண்டபம், கணினிப் பிரிவு என்பற்றோடு சர்வதேச வலைப் பின்னலில் தொலைக்காட்சிச் சேவையையும் ஆற்றி வருகின்றது.

"இணுவில் பொதுநூலக கலாசார மண்டம்" கலை, மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காகவும், பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் நூலகம் என்பன இயங்குவதற்காகவும் பல லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முன்னேறிவரும் காலச் சூழலுக்கேற்ப நவீன தகவல் தொழில்நுட்பத்துறை எமது பிரதேசங்களில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த நிலையைப் போக்கும் முகமாகவும், உலக அளவில் புலம்பெயர்ந்து பரந்து வாழும் எம் அன்பர்களின் உறவுகளைப் பேணும் முகமாகவும் சர்வதேச வலைப் பின்னலில் இணுவில் பொது நூலகமானது "www.inuvilinfo.com" என்ற இணைய தளத்தையும் www.inuvillibrary.com என்ற நூலகத்தளத்தையும் நிறுவியுள்ளது. மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளையும், நிகழ்காலத் தகவல்களையும் தாங்கிவரும் இந்த இணையத்தளமானது புலம் பெயர்ந்து வாழும் எம்சகோதரர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாகவே அமையும்.

அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் சமுதாய விடிற்காகச் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற இணுவில் பொது நூலகமானது மென்மேலும் வளர்ச்சி கண்டு நூலகங்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாக விளங்கும் என நம்புவோமாக.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் விருந்து

## "இணுவில் ஒலி" இரு திங்கள் இதழ்

மேற்படி இதழ் வெளியிடுவது அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, கல்வி, ஆன்மீகம், பொருளாதாரம், சமூகநலன் போன்ற பல அம்சங்களைத் தாங்கி வெளிவரவுள்ளது இணுவில் மக்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

குறிப்பாக இணுவில் கிராமத்து மாணவர்களும், பெரியவர்களும் தங்களது சுய படைப்புக்களை வெளிக்கொண்டுவர நல்ல வாய்ப்பினை "இணுவில் ஒலி" வழங்குகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகின்றது.

"இணுவில் ஒலி" மூலம் இளம் படைப்பாளிகளை உருவாக்குவதும் அவர்களை ஒருங்கிணைத்துக்கொள்வதும் சமூகத்தில் நட்புறவை பேண வழிவகுக்கும் என்பதுடன் சிறார்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் அமையும் என்பது திண்ணம். எனது நல்வாழ்த்துகளை வழங்குவதுடன் முழு ஒத்துழைப்பும் பாடசாலை ரீதியாக வழங்குவோம் என அறியத்தருகின்றேன். ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்கள் தொடர்ந்து அனுப்பிவைக்கப்படும்.

***- அ.சதானந்தன்***

***அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி,***

---

## ஓங்கி ஒலிக்கட்டும் இணுவில் ஒலி!

முதல் இதழிலேயே (புரட்டாதி - ஐப்பசி 2012) அறிஞர் சபா ஜெயராசா, பிரபல கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம், எழுத்தாளர் தமிழ்த்தென்றல் தம்பு சிவா உட்பட பதின்மூன்று எழுத்தாளர்களின் கனதியான ஆக்கங்கள்.

எனது நண்பர் செல்லப்பா நடராசாவின் "இன்றைக்கொரு சோறுண்டு" என்ற இணுவில் பண்பாட்டைப் பறை சாற்றும் கட்டுரையை எடுத்துக் கொண்டால்,

நண்பர் நடராசா இணுவிலை அச்சொட்டாகப் படம் பிடித்துள்ளார் என்றே சொல்லவேண்டும். கொழும்பில் உள்ள இன்றைய இணுவிலார் கூட "இன்றைக்கொரு சோறு" என்ற சொற்பதத்தைப் பயன்படுத்துவதைக் காண்கின்றேன். ஒரு சிறு திருத்தம் நண்பா, இணுவிலார் இன்றைக்கொரு சோறு என்று அல்ல; "இண்டைக்கொரு சோறு" என்று தான் வட்டார வழக்கில் பேசுகின்றனர்.

நண்பருக்கு இன்னொரு குறிப்பு. உங்கள் கண்டுபிடிப்பு வெகு ஜோர்! மேன்மேலும் தேடுங்கள்; எம்போன்ற சுவைஞருக்கு அள்ளி வழங்குங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"இணுவில் ஒலி" ஆசிரியர் நண்பர் தம்பு சிவாவுக்கு ஒரு தயவான வேண்டுகோள். கட்டுரை, கவிதை, மங்கையர் மாண்பு, பண்பாட்டுப் பாரம்பரியம், சிறுவர் உலகம், நிகழ்வுகளின் சங்கமம் முதலியவை தந்தீர்கள். மிக்க நன்றி. ஆக்க இலக்கியத்தை ஏன் மறந்தீர்கள்? அடுத்த இதழிலேயே ஆக்க இலக்கியம் இடம் பிடிக்கும் என நம்புகின்றேன்.

ஓங்கி ஒலிக்கட்டும் இணுவில் ஒலி! வாழ்த்துக்கள்!

***- வேல் அமுதன், வெள்ளவத்தை.***

---

## பல்வகை அம்சங்கள் பல கண்டேன்

ஒரு கிராமமே ஒன்றிணைந்து வெளியிடும் ஒரு பண்பாட்டுக் கோலமாக "இணுவில் ஒலி" வெளிவந்துள்ளது. பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தமது கட்டுரையில் வீரமணி ஐயரைப் பற்றிய பல அற்புதமான தகவல்களைத் தந்துள்ளார். சைவப்புலவர் சு.செல்லதுரை, உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன், தமிழ்த்தென்றல் தம்பு சிவா ஆகியோரின் கட்டுரைகள் புதிய அம்சங்களை வெளிப்படுத்தியுள்ளன. மேலும் இணுவில் ஊரைப் பற்றிய பலவகையான தகவல்களும் படைப்பாளிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன. எனது ஊரான அளவெட்டிக்கும் இணுவிலுக்கும் நிறையத் தொடர்புகள் உண்டு. பல்வகை அம்சங்களைத் தாங்கி வெளிவரும் இணுவில் ஒலிக்கு எனது வாழ்த்துக்கள்.

***- த.குமாரசாமி, அளவெட்டி.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் பக்தி இலக்கியங்கள்

- இணுவையூர் வே.பி.சந்திரன்.

மக்களின் மனப்பாங்கும், வாழ்க்கை நிலையும் காலந்தோறும் மாறுவதைப் போலவே, இலக்கியப் பாங்கும் மாறுகிறது.

தமிழைப் பொறுத்தமட்டில், சங்க காலத்தில் சிறுசிறு தனிச் செய்யுட்களும், இடைக்காலத்தில் தொடர்நிலைச் செய் யுட்களும் காப்பியங்களும், பிற் காலத்தில் பிரபந்தங்களும் புராணங்களும் தோன்றி யமை, காலத்தின் நிலை, மக்களின் மனப்பாங்கு ஆகியவற்றுக்கேற்ப இலக்கியங்களும் மாறி வந்திருக்கின்றன.

சங்க காலத்தையும், நிதிநூல் காலத் தையும் அடுத்து நம்மவர்களுக்குத் தெளி வாகக் காணப்படுவது பக்தி இயக்கக் கால மாகும். கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கும், பத்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைப் பக்தி இயக்கக் காலம் எனலாம். தொகையும் பாட்டும் கணக்கு மாக வளர்ந்த தொன்மைத் தமிழ், இவ் விடைக்காலத்தே சமயத் தமிழாகத் தழைத்தது.

வடக்கிலிருந்து ஈண்டு வந்த சமணமும் பௌத்தமும் தத்தம் சமயக் கொள்கை களைத் தமிழ்நாட்டில் பரப்பத் தொடங்கிய அக்காலத்தே, இந்நாட்டிலேயே எத் தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் னேழுந்த சைவமும் வைணவமும் அவற் றிற்கு எதிராகப் பொன்போற் கருத்துக்கள் பொலியும் தத்தம் சமய உண்மைகளை எடுத்தியம்பலாயின. சமயக் கருத்துக் களைத் தண்டமிழ் நூல்களாக வெளி யிடலாயின. அதனால் தமிழும் தழைத்தது; சமயக் கருத்துக்களும் பரவின.

இப்பக்திப் பாடல்களால் தமிழ் இலக்கிய உலகிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கேற்ப, தலைவன் தலைவி பெயர் சுட்டப்படாமல், கற்பனை மனிதர் இருவரின் காதலாக இருந்த பாட்டுக்கள் மாறி, இறைவன் மீது கொண்ட காதலைப்பாடும் பாட்டுக்கள் வளர்ந்தன.

மன்னனின் வீரச்செயல்களையும், வள்ளலின் கொடையையும் வலிந்து பாடும் நிலை நீங்கி, ஆண்டவனின் அருட் செயல்களையும், அற்புதங்களையும் பாடும் பாடல்கள் வளர்ந்தன. அரண் மனைக்குச் சென்று அரசன் துயிலெழுப் பாடிய இசைப்புலவர்கள், கோயிலுக்குச் சென்று இறைவனுக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடினார்கள். கற்பனைக் காதலுக்குப் பின்னணியான அந்தந்த நிலங்களின் இயற்கைச் சூழல்களை வர்ணித்த கவிஞர்கள், கடவுள் பக்திக்குப் பின்னணியான கோயில் தலங்களைச் சுற்றிய இயற்கையழகை வியந்து பாடினார்கள்.

சுருங்கக் கூறின், நாடாளும் மன்னர் களையும், பணம் படைத்த செல்வர் களையும் பாடுவதற்கு மட்டுமே பயன்பட்ட தமிழ், பரம்பொருளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்பட வேண்டுமென்ற நிலை பக்தி இயக்கத்தால் வளர்ந்தது. இத் தகைய மாற்றத்தை தமிழில் உருவாக்கிய பெருமை சைவ சமயச் சான்றோர்களாகிய நாயன்மார்களையே சாரும். அவர்களது அருந்தமிழ்ப் பாடல்களால் சைவம் புத் தெழுச்சியோடு வீறு பெற்று வளர்ந்தது.

நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரும் மட்டுநகர் சுவாமி விபுலானந்தரும் பக்தி இலக்கியங்களைத் தந்து எமது மொழியையும் சமயத்தையும் வளர்த்தார் கள். அவர்கள் வழிநின்று பல சைவப் பெரியார்கள் பல்வகையான பக்தி நூல்களை இன்றுவரை வெளியிட்டு வருகின்றார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடற்கலை



- ராதா சிவசுப்பிரமணியம்

தமிழ் மண்ணில் உருவாகி வளம் பெற்று, அகில இந்தியாவில் மட்டுமன்றி, உலகின் பரந்துபட்ட நாடுகளிலும் பரதக் கலை நாளுக்குநாள் நல் வரவேற்பைப் பெற்றுவருகின்றது. இந்தியப் பண்பாட்டுப் பின்னணி அல்லாதோரும் இக்கலையை விரும்பிப் பயின்று அரங்குகளில் ஆடி அபிநயித்து மக்களைப் பரவசப்படுத்தி வருகின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வாழும் நமது நாட்டியக்கலையின் வளம்மிக்க மரபை இலங்கையிலும் சில தசாப்தங்களாக எம்மவர்கள் பாதுகாத்து வளர்த்து வருவது கண்கூடு.

இசை இன்றி நடனம் இல்லை எனக் கூறுமளவிற்கு இசைக்கலையும் பரதக் கலையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இறைபக்தியையே மையமாகக் கொண்டெழுந்த கர்நாடக சங்கீதமும் பரதக்கலையும் இலங்கையின் கல்விப் பாடவிதானத்தில் முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் நுண்கலைப் பீடங்கள் இயங்கி வருகின்றன.

நாட்டியமானது தமிழ்மொழியில் கூத்து, ஆடல், லயம், நிருத்தம், நடனம், நர்த்தனம், நடம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் சிறப்பானதாகக் கருதப்படும் இப் பரதக்கலையானது நெகிழ்ச்சி உடையது. ஒவ்வொரு கலைஞனும் இக் கலையை தனக்குகந்தாகத் தனது ஆற்றலுக்கு ஏற்றவாறு ஆக்கிக் கொள்கிறான். அவ்வண்ணமே ஒவ்வொரு நடன ஆசிரியரும் தமது கற்பனை வளத்திற்கும், ஆக்கத் திறனுக்கும் அமைய பரதநாட்டிய உருக்களைத் தயாரித்தளிக்கிறார்கள். கதை தழுவிய ஆடலாகிய நாட்டிய நாடகத்திலும் பரதநாட்டியப் பாணியே புகுத்தப்படுகிறது.

கோயில் கலையாக இருந்த சதிர் நாட்டியத்தை 'பரதநாட்டியம்' எனப் பெயர் சூட்டி அதனை அரங்குக்குக் கொண்டு வந்தவர் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் அவர்கள். பரதநாட்டியத்தை குருவிடம் முறையாகக் கற்றவர்கள் அரங்கேற்றம் செய்வார்கள். **அரங்கேற்றம் என்றால் ஒரு நடனமாது தான் கற்க வேண்டிய பரதநாட்டிய உருக்கள் யாவற்றையும் கற்றபின் முதன்முதலாக அவையோர் முன் தனது ஆற்றலை வெளிக்காட்டுகின்ற நிகழ்வாகும்.** அரங்கேற்ற நிகழ்வுக்குக் கூடிய பணச்செலவு ஏற்படும் என்ற காரணத்தினால் எல்லோரும் அரங்கேற்றம் செய்து கொள்வதில்லை. பணம் படைத்தவர்களே மிக ஆடம்பரமான வகையில் தமது பிள்ளைகளின் அரங்கேற்றத்தை ஏற்பாடு செய்து நடத்திவருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

உணர்வுகளை அனுபவித்தலோடும் வெளிப்படுத்தலோடும் ஆடல் தொடர்புடையது. இசையும் அவ்வகை இயல்பைக் கொண்டதால் இலகுவாக அவை இணைந்து கொள்கின்றன. புவியீர்ப்பும் அதற்கியைந்தவாறு உடலைச் சம நிலைப் படுத்தலும் ஆடல் அசைவுகளைக் கட்டுப் படுத்துகின்றன. ஆடலின் அசைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுபடுத்தப்படுகின்றன. வரன் முறையாக ஒழுங்கமைக்கப்படுகின்றன. பொருத்தமான அசைவு ஒலிப்புக்களால் வளமூட்டப்படுகின்றது. ஆடல் என்ற கலையாக்க நடவடிக்கை 'ஆடலியல்' (CHOREOGRAPHY) எனப்படும். அனைத்து அசைவுகளும் ஆடல் அன்று. அழகியல் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அசைவுகளே ஆடலாகின்றது. சில சமயங்களில் குறிப்பிட்ட உடலசைவு நிலையில் அசையாது உறைந்து நிற்றலும் அழகைத் தூண்டும் ஆடலாகி விடுகின்றது.

தீவிரமான பரிசோதனைகளும் புத்தாக்கங்களும் மேலைப்புல ஆடற்கலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான பரிசோதனைகளுக்கு இசையும் ஒன்றிணைந்து ஈடுகொடுக்கத் தொடங்கியுள்ளது. ஆடல் என்பது இசை, கதை எடுத்துரைப்பு, பாத்திர வளர்ச்சி என்ற நாடகப் பாங்கானதாக மாறும் பொழுதுதான் அழகும் அர்த்தமும் பெறுமென ஆடலியலாளர்கள் நொவீரே, பொகினி ஆகியோர் வலியுறுத்தலாயினர். உடலைக் கருவியாக்கிக் கலையாக்கம் செய்தல் ஆடலாகின்றது. உடலியக்க இணைப்பு ஆடலுக்கு அடிப்படையாகின்றது. ஆடலும் இசையும் அரங்கும் ஒன்றையொன்று தழுவியே வளர்ந்து வந்துள்ளன. தமிழ் மரபில் ஆடல் என்பது இசையுடன் கூடிய ஒன்றிணைப்பைப் புலப்படுத்தி நிற்கின்றது.

வரலாற்றுப்பிரகாரம் தமிழகத்தில் காலங்காலமாக ஆடற்கலையை 'பரத நாட்டியம்' என்று அழைத்து வந்துள்ளனர். இது நாட்டிய நாடகப் பாணியிலேயே அமைந்திருந்தது. அன்றைய நிலையில் இதனைக் கூத்து என்று அழைத்தனர். நடனம் ஆடுபவர்களை கூத்தர், கூத்தியர் என்றும் பாடல் பாடுவோரைப் பாணர் என்றும் அழைத்தனர். சாஸ்திரிய நடனம் 'மார்க்கம்' எனவும், பொதுமக்களுக்குரிய நடனம் 'தேசி' எனவும் அழைக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

மரபுவழிவந்த பரதநாட்டியக் கலைஞர் அபிநயஅரசி பாலசரஸ்வதியும், பரத நாட்டியக் கலையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட டாக்டர்.திருமதி.ருக்மிணிதேவி அருண்டேலும் நாட்டியத்தின் பெருமையை உலகறியச் செய்தனர். குறவஞ்சி நாடகத்தை திருமதி.ருக்மிணிதேவி அருண்டேல் 1944ஆம் ஆண்டில் நாட்டிய நாடகமாகத் தயாரித்து அரங்கேற்றினார். அந்த நாட்டிய நாடகத்தின் கதாநாயகியாகிய வசந்தவல்லியின் பாத்திரத்தைத் தானே ஏற்றுத் திறம்பட நடித்துள்ளார்.

திருமதி.ருக்மிணிதேவி அருண்டேலின் சுவடுகளை அடியொற்றி திருமதி.கமலா லஷ்மணன் 'அழகர் குறவஞ்சி' என்னும் நாட்டிய நாடகத்தையும், டாக்டர் பத்மா சுப்பிரமணியம் 'அர்த்தநாரீஸ்வரர் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி என்னும் நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றினார்கள். இதே போன்று அடையார் திரு.கே.லஷ்மணன் 'வருணாபுரிக் குறவஞ்சி' என்னும் நாட்டிய நாடகத்தைத் தயாரித்து அரங்கேற்றினார்.

'கண்ணப்பர் குறவஞ்சி', 'கிருஷ்ணமாரிக் குறவஞ்சி' ஆகிய நாட்டிய நாடகங்கள் திருமதி.ருக்மிணிதேவி அருண்டேல் அவர்களால் நடன அமைப்புச் செய்யப்பட்டு 'கலாஷேத்ரா' நடனக் குழுவினரால் அரங்கேற்றப்பட்டன. மார்க்கண்ட நாவலர் என்பவரால் இயற்றப்பட்ட கண்ணப்பர் குறவஞ்சியானது குறவஞ்சி - பண் - கீர்த்தனம் ஆகிய அமைப்புகளில் உருவாக்கப்பட்ட சிறந்த நாட்டிய நாடகம் என்று பேசப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இன்றும் தமிழ்நாட்டில் பல நடனக் கலைஞர்கள் நாட்டிய நாடகங்களை அரங்கேற்றி வருகின்றார்கள்.

பரதநாட்டியம் இந்தியாவின் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் புகழ்பெற்று விளங்கினாலும், இன்று ஈழமணித் திருநாட்டிலும் தமிழ்நாட்டுக்கு நிகராகச் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. அதற்கு முன்னின்று உழைத்தவர்களான இணுவில்மண் தந்த ஏரம்பு சுப்பையாவையும், என்.வீரமணி ஐயரையும் எவரும் மறந்துவிட முடியாது.

ஆந்திராவில் குச்சுப்பிடி எனவும், மலையாளத்தில் கதகளி எனவும், வடநாட்டில் மணிப்புரி எனவும், தமிழ்நாட்டில் பரதநாட்டியம் எனவும் கலைகள் வளர்ந்து வருகின்றன. புலம்பெயர் நாடுகளில் வாழும் எம்மவர்களும் பரதநாட்டியக் கலையைப் போற்றி வளர்த்து வருகின்றார்கள்.

"மோனத்து இந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சூழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையால் பிறந்தது ஆட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது இயல்பே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே"

– கூத்தனூர்ச் சாத்தன் ★

## வளர்முக நாடுகளில் இணையத்தின் பயன்பாடு

*மனித உரிமை மீறலுக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு இணையம் பல வாய்ப்புகளை வழங்குகின்றது. அவர்களால் இவ்விடயம் பற்றிய தகவல்களை உடனுக்குடன் உலகெங்கும் அனுப்ப முடிகிறது. 1989 இல் பீக்கிங்கில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றி உலகுக்கு அறிவிக்க முதன்முதலாக இணையம் பயன்படுத்தப்பட்டது. சகல மனித உரிமை இயக்கங்களும் இணையத்தள வசதிகளைக் கொண்டுள்ளதால் தகவல்கள் உடனடியாகப் பரிமாறப்படுகின்றன. பெரும்பாலும் செல்வந்த நாடுகளுக்கான தகவல் ஊடகமாக இணையம் விளங்குவதால் சகல தகவல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. உலகில் 6000ற்கும் மேற்பட்ட மொழிகள் உண்டு. 47 கோடி மக்களே ஆங்கிலமொழி பேசுபவர்கள் ஆனால் 90 சதவீதமான தகவல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. இதனால் ஆங்கில மொழி கோளமயமாக்கப்பட்டு வருகின்றது. பிறமொழிகளும் கலாசாரங்களும் முக்கியத்துவம் இழந்து வருகின்றன. இணையத்தளங்கள் உலக நாடுகளில் பெருகிவரும் இச்சந்தர்ப்பத்தில், வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளி மேலும் விரிவடையும் அபாயம் காணப்படுகிறது.* ★

## பக்தியும் பண்பாடும்

*அருந்தமிழ் வளர்த்த ஆண்டாளின் 'பாவை நோன்பு' உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆக்கம் தரும் சீரிய நெறிமுறையாகும். இற்றை நாளில் நாகரீகம் என்ற பெயரால் நம்மவர்கள் பலர் அப்பண்பாட்டையே மறந்து வருகின்றனர். பழக்க வழக்கங்களிலே சிலவற்றைக் கைவிடலாம்; சடங்குகளிலே பலவற்றைத் துறக்கலாம்; ஆனால் பக்தியைத் துறந்துவிடக் கூடாது. பக்திநெறி அழியுமானால் மனித சமுதாயத்தின் எஞ்சியுள்ள பண்பாடுகளும் அழிந்து விடும்.* ★

**புதியவரவு**



# கேடயம்

விளையாட்டுத் துறைக்கான ஒரு தமிழ்ச் சஞ்சிகை 'கேடயம்' என்னும் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது. க.வரோதயனை ஆசிரியராகக் கொண்டு, சாந்தினி பதிப்பக வெளியீடாக வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில் என்ற முகவரியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. பணி தொடர வாழ்த்துகின்றோம். ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை

# கூத்தும் மரபும்



- இணுவை வசந்தன்

கூத்து என்பது ஆடலையும் பாடலையும் அடிப்படையாகக் கொண்டு கதையைக் கூறும் ஒரு நாடக வடிவமாகும். தமிழர் மத்தியில் கூத்து என்ற ஒரு பாரம்பரிய நாடக வடிவம் உண்டு. தமிழர் மத்தியில் ஆடப்படும் கூத்தை வடமோடி, தென்மோடி என இரு பிரிவுகளாக வகுத்துள்ளனர். வடமோடி வேகமும் விறுவிறுப்புமுடையது. தென்மோடி நுணுக்கமும் மென்மையுமுடையது. இரண்டு வகையான கூத்துக்களுக்கிடையே ஆடல், பாடல், உடை என்பற்றில் வேறுபாடுண்டு.

தமிழர் கூத்து மரபில், இந்துமதம் சார்ந்த கதைகளும் கிறிஸ்தவ மதம் சார்ந்த கதைகளும் இடம்பெறலாயின. சிலாபம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் 16ஆம் நூற்றாண்டிலிருந்தும், மலையக மக்கள் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்தும் கூத்து இடம்பெற்று வந்துள்ளது. மலைகத்தில் காமன் கூத்து, வசந்தன் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன.

ஆரம்பகாலத்தில் பார்வையாளர்கள் சுற்றிவர உட்கார்ந்திருக்க வட்டக்களரியில் பந்த வெளிச்சத்திலும், முழு நிலவு வெளிச்சத்திலும் கூத்து இடம் பெற்றதாக அறியமுடிகிறது. நாட்டு நிலைமை, கால மாற்றங்கள் காரணமாக சற்றுப் பின் தள்ளப்பட்ட நிலை தோன்றினாலும் இன்றுவரை கிராமிய மக்களால் அவை பேணப்பட்டு வருவதைக் காணலாம்.

இக்கூத்துக்கள் கிராமிய மக்களுக்குக் குறிப்பாக வயலில் வேலை செய்பவர்கள், மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்கள், கூலித் தொழில் செய்பவர்கள் ஆகியோருக்கு உடல் சோர்வை நீக்க அறிவு சார்ந்ததும், விழுமியங்கள் போன்றவற்றைப் புகட்டும் கல்வி அரங்காகவும். சமூகங்களை ஒற்றுமைப்படுத்தும் சமூக அரங்காகவும் இருந்துள்ளன.

வடமோடிக் கூத்து மட்டக்களப்பின் கிராமங்களில் முன் இரவு தொடங்கி விடிய விடிய ஆடப்படும் ஒரு கூத்தாகும். அதற்கெனத் தனித்துவமான ஆடல் பாடல்களும் உள்ளன. இக்கூத்தில் ஒவ்வொரு பாத்திரங்களும் ஆடவரும்போது தம்மைத் தாமே அறிமுகப்படுத்தும்; பின்னர் ஒரு ஆட்டத்தை ஆடி முடிக்கும். இவ்வாட்டத்திற்குத் தாளக்கட்டுக்கள் பாவிக்கப்படும். அவை அப்பாத்திரத்தின் குணாதிசயத்தை விளக்கி நிற்கும்.

அலங்கரிக்கப்பட்ட வட்ட மேடை நடுவே கூத்தைப் பழக்கிய அண்ணாவியாரும் பிற்பாட்டுக்காரரும் நின்று பின்னணி இசை இசைக்க கூத்தாடுபவர் அவர்களைச் சுற்றிச் சூழவுள்ள மக்களைப் பார்த்தபடி ஆடிவருவர். கூத்து நடக்கும் போது கூத்தாடுபவர்களுக்கு கிராமமக்கள் மாலை அணிவித்து, சால்வை கட்டி, பணம் வழங்கி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வார்கள்.

யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களில் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்ததாக அறியமுடிகிறது. இணுவில், பாசையூர், அளவெட்டி போன்ற கலை ஆர்வம் மிக்க ஊர் மக்களினால் கூத்துக்கள் ஆடப்பட்டன என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள். அண்ணாவியார் ஏரம்புவின் முயற்சியால் இணுவிலில் கூத்துக்கள் ஆடப்பட்டதாக அறியமுடிகிறது.

இன்றைய சமூக பொருளாதார மாற்றங்களால் முன்புபோல் கூத்துக்கள் போடும் முறை தற்பொழுது பெருமளவில் அருகிப் போய்விட்டது. இக்கூத்து மரபை போரசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் நவீனமயப்படுத்தி புத்தாக்கம் செய்து குறைந்த நேரத்தில் அரங்குகளில் அரங்கேற்றி பல்கலைக்கழக மட்டத்தில் அதற்குரிய மதிப்பைத் தேடித் தந்துள்ளார்.

தற்பொழுது பேராசிரியர் காட்டிய மரபே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு மாதத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# சிறாரின் வாசிப்பும் செயற்பாடுகளும்

- தேடலோன்

சிறாரின் வாசிப்புத் தொடர்பான ஆய்வும் நோக்கும் இன்றைய தமிழ்ச் சூழலில் மிகவும் முக்கியம் பெறுகின்றன. சிறார் நிலையிலிருந்தே வளர்ந்தோரின் வாசிப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

வாசித்தல் என்பது தனிமை நிலையில் நிகழும் ஒரு செயல்முறை. அது தனிமை நிலையிலே மகிழ்ச்சியைக் கொடுக் கின்றது. தமது வாசிப்பு மகிழ்ச்சியைப் புலப் படுத்தும் வண்ணம் கருத்தை வெளிப் படுத்தும் ஆற்றலும் சிறுவருக்கு உண்டு.

வாசிப்புப் பொருட்கள் சிறுவரின் சுவையைத் தெறித்துக் காட்டுவதுடன் சுவையை மீள வலியுறுத்தவும் செய் கின்றன. கதையாக்கங்களிலே கற்பனை மற்றும் நடப்பியல் இரண்டும் இணைந்து இருக்கும்வேளை சிறாரின் அறிபரவல் இரண்டுடனும் இணைந்து செல்கின்றது.

தொன்மக் கதைகளை வாசிப்பதி லேயே சிறுவர்கள் அதிக ஈடுபாடு காட்டு கின்றனர். தொன்மங்களிலே காணப்படும் தனித்துவமான கற்பனை வளம் வாசிப்பைத் தூண்டுகின்றது. சிறுவர் வாசிப்பின் போது ஏற்படும் ஒரு முக்கிய மான நிகழ்ச்சி அவர்கள் கதைகளினூடே கண்டு கொள்ளும் வீரர்களைத் தமக்குரிய மாதிரி வடிவினராகக் கொள்ளுதலாகும்.

சிறுவரின் வாசிப்பினூடே இரண்டு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதாவது ஒன்று வாசிப்பினூடே விழைவு இன்பம் கண்டு ஒன்றித்துவிடுதல் மற்றது வாசிப்பிலிருந்து புதிய கண்டுபிடிப்புக் களுக்கு நகர்த்தல். ஒவ்வொருவருக்கு முரிய உள இயல்பினைப் பொறுத்து இரண்டில் ஒன்று மேலோங்கி நிற்கும்.

வாசிப்பவருக்கும் வாசிக்கப்படும் இலக்கியத்துக்குமிடையே படைப்பு மலர்ச்சி சார்ந்த தொடர்பாடல் நிகழ்ந்த வண்ணமிருக்கும். அந்தத் தொடர்பாடல் வழியாக வலுவடைய வாசிப்பின் மீதான ஈடுபாடானது மேலோங்கிச் செல்லும். சிறாரின் உளவியல் தனித்துவத்திற்கு ஏற்றவாறு அவர்களின் வாசிப்புக் கோலத்தின் தனித்துவமும் ஈடுபாடும் அமையும்.

மேற்கொள்ளப்பட்ட உளவியல் ஆய்வுகளில் இருந்து மகிழ்ச்சியான முடிவுகளைக் கொண்ட கதைகளையே சிறுவர் பெரிதும் விரும்புவதாகச் சொல்லப்படுகின்றது. புகழ்பெற்ற சிறுவர் இலக்கியங்கள் மகிழ்ச்சிதரும் முடிவு களையே கொண்டுள்ளன. உடனடியாக நல்ல முடிவு கிடைக்க வேண்டும் என்பது சிறாரின் வாசிப்பிலிருந்து எழும் பிறிதொரு கருத்தாகும்.

இலகுவான வாசிப்பையே சிறார்கள் விரும்புகின்றனர். அதாவது வாசித்தல் என்ற பொறிமுறைச் செயற்பாட்டை உணராமல் செய்யும் ஆக்கங்களையே அவர்கள் விரும்புகின்றனர். அத்தகைய நிலையில் சிறாரின் மொழி வீச்சுக்குரிய இலக்கிய ஆக்கம் முதன்மை பெறு கின்றது. அதேவேளை சிறார் இலக்கியங் கள் சூழலுடன் சேர்ந்து கொள்வதற்கு உறுதுணையாகின்றன. ஒரே நகைச்சுவை ததும்பும் கதைகளை மீண்டும் மீண்டும் வாசிக்கும் செயற்பாடு சிறுவர்களிடத்துக் காணப்படுகின்றது. தனிமை நிலையில் அவர்களுக்கு அது உளவியல் சார்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தியை வழங்குகின்றது.

வாசிப்பின் பொழுது விடுகற்பனைகளை சிறுவர்கள் அனுபவிக்கின்றனர். நாளாந்த அழுத்தங்களிலிருந்து அவர்கள் விடுபட்டுக் கொள்வதற்கு விடுகற்பனைகள் துணை செய்கின்றன. சிறுவர்கள் வாசிப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். அதேவேளை வாசிப்பையும் கட்டுப்படுத்துகின்றனர்.

சிறுவர்களுக்குரிய வாசிப்பின் வெற்றி வாசிப்புக்கும் விளையாட்டுக்கும் இடைவெளி தோன்றாத நிலையின் வெளிப்பாடு ஆகும். அந்த வெற்றியில் நடப்பு உலகமானது அவர்களது கண்ணோட்டத்தில் விளையாட்டு உலகமாகத் தோற்றமளிக்கும். சிறுவர்கள் வளர்ச்சியடையும் பொழுதுதான் விளையாட்டு உலகத்திற்கும், நடப்பியல் உலகத்திற்கு மிடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வர்.

வாசிக்கும் அனுபவ வெளியை அடியொற்றி தமக்கே உரிய மதிப்பீடுகளைச் சிறார் செய்வர். வாசிப்பின் வழியாக மனத்தில் புதைந்துள்ள உணர்வுகளுடன் உறவாடுவதற்குச் சிறுவர் விழைகின்றனர். அந்த உளநிறைவு எட்டப்படும்போது அவர்களுக்குக் குதூகலம் ஏற்படுகின்றது. அவ்வாறு எட்டப்படும் குதூகலம் பராமரிக்கப்படும் பொழுது அவர்களின் வாசிப்புவிருப்பு நீண்டு செல்கின்றது. இந்த வகையில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பது அவசியம்.

**"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"**

நிகழ்வுகளின் பதிவுகள்

## கலாசாரப் பெருவிழா – 2012

*வலி-தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் 2012 ஆம் ஆண்டுக்கான கலாசாரப் பெருவிழா அண்மையில் இணுவில் இளந்தொண்டர் சபையினரின் கலாசார மண்டபத்தில் வலி-தெற்கு பிரதேச சபைச் செயலாளர் மு.நந்தகோபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.*

*விழாவில் முக்கியஸ்தர்களின் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து, பிரதேசத்துக்குரிய பாரம்பரிய கலைகளின்சங்கம் நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. வலி-தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் கலை, இலக்கியம், சமயம், பொதுச்சேவை ஆகியதுறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய எண்மர்* **'ஞான ஏந்தல்'** *விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றனர். இணுவையூரைச் சேர்ந்த சோ.பரமசாமி அவர்கள் இலக்கியத்துறைக்கு ஆற்றிய பணிக்காகவும், முன்னாள் கிராம அலுவலர் மு.சிவலிங்கம் அவர்கள் சமய, சமூக இலக்கியத் துறைகளுக்கு ஆற்றிய சேவைக்காகவும், நாகசுர வித்துவான் உ.பாலகிருஷ்ணன் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காகவும், மா.ந.பரமேஸ்வரன் அவர்கள் நாடகத்துறை வளர்ச்சிக்கும், சைவசமய மேம்பாட்டுக்கும் ஆற்றிவரும் பணிக்காகவும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இணுவில் மண்ணுக்குக் கிடைத்த பெருமையாகும்.*

**எமது மண்ணின் மைந்தர் நால்வரையும் மற்றும் விருதுபெற்ற வலி–தெற்கு பிரதேசத்தின் ஆற்றல் மிக்க பணியாளர்களையும் கௌரவத்துடன் வாழ்த்தி மகிழ்வதில் 'இணுவில் ஒலி' பெருமை கொள்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு ஒரு ஆபத்தான நோய் என்பதால் கட்டுப்பாடு விழிப்புணர்வு ஆவசியம்

உலகம் முழுவதிலுமுள்ள மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோயாக நீரிழிவு நோய் இருந்துவருகிறது. உலகிலுள்ள சனத்தொகையின் 14 சதவீதமான மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். இலங்கையில் 20 சதவீதமானவர்கள் நீரிழிவு நோய்க்கு உட்பட்டுள்ளார்கள். இந்தியாவில் 53 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகம் முழுவதிலுமுள்ள 366 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. 2030ஆம் ஆண்டளவில் இந்நோயாளர்களின் எண்ணிக்கை 522 மில்லியனாக அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. இந்நிலையில் சர்வதேச நீரிழிவு சம்மேளனம் (IDF) உடனடியாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் நவம்பர் 14ஆம் திகதியை நீரிழிவு தினமாக அறிவித்து செயற்பட்டு வருகின்றது.

ஒரு காலத்தில் வயதுவந்த வயோதிபர்களுக்கு மட்டுமே வரும் நோயாகக் காணப்பட்ட நீரிழிவு நோய் இன்று அனைத்து வயதினருக்கும் ஏற்படும் நோயாக மாற்றமடைந்துள்ளது. முறையற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் காரணமாக பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுள் நிரந்தரமாகக் குணப்படுத்த முடியாத ஆனால் கட்டுப்படுத்தக் கூடிய நோயாக நீரிழிவு நோய் உள்ளது. நீரிழிவு நோயானது மரபணு மூலமாக அடுத்த தலைமுறைக்குச் செல்லும் ஒரு நோயாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் இன்றைய தலைமுறை நீரிழிவு நோய் தொடர்பில் அவதானமாக இருப்பது இந்நோயின் தாக்கத்தை எதிர்காலத்தில் குறைப்பதற்கு வழி வகுக்கும்.

- ஆரோக்கியன்

உடற்பருமன் நீரிழிவு நோய்க்கு ஒரு காரணியாக அமைகிறது. உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி ஆகியன இந்நோயினைக் கட்டுப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன. நீரிழிவு நோய் வந்தவர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படும் சாத்தியம் உள்ளது. அதிக குருதி வெளியேற்றம், சிறு நீரகம் சம்பந்தமான நோய்கள் எற்படல், கண்பார்வை குறைதல், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைதல், இதய நோய்கள், பக்க வாதம் ஆகியன ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. உணவுப் பழக்கவழக்கங்கள் இந்நோய் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணமாக இருந்த போதிலும் மன அழுத்தமும் இந்நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணியாக அமைகிறது என இனங்காணப்பட்டுள்ளது.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

**புதியவரவு**



இணுவில், மஞ்சத்தடியைச் சேர்ந்த சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன் அவர்கள் 'ஆஸ்துமாவுடன் வாழ்தல்' (LIVING WITH ASTHMA) எப்படி?' என்னும் நூலை எழுதி அண்மையில் வெளியிட்டுள்ளார். நூலாசிரியரின் 16வது நூலாக இதன் வரவு இடம்பிடித்துள்ளது. அவரின் ஆக்கப் பணி தொடர 'இணுவில் ஒலி' வாழ்த்துகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபத்தைந்து அகவை கண்ட இணுவில் தொழிலதிபர் அண்ணா கோப்பி நடராசா.



அண்ணா கோப்பி நடராசா என்றால் இந்த நாட்டில் அறியாதோர் இல்லை எனலாம். இவர் தான் அண்ணா கோப்பி நிறுவனத்தை உருவாக்கிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்து உயர்ந்து நிற்கும் சாதனையாளர் சு.பொ.நடராசா (எஸ்.பி.என்) ஆவார்.

இவர் பூமி திருத்திப் புகுபொருள் கொண்டு தாமும் உண்டு, தமை அடைந் தோர்க்கும் இல்லையென்னாது ஈந்து உவந்து வாழும் இணையிலியென்ப் போற்றப்படும் இணுவிலில் பிறந்த சாதனையாளராகத் திகழ்கின்றார். பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் மைந்தனாக 1937 - 10-19 இல் பிறந்த இவர் 2012 - 10- 19 இல் தனது பவளவிழாவைக் கொண்டாடினார்.

அண்ணாகோப்பி நடராசாவின் வர லாறும் அண்ணாகோப்பி நிறுவனத்தின் வரலாறும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாதவை. "நிறுவனத் தலைவரின் ஆளுமை விருத்தி தான் நிறுவனம்" என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து இன்று பலநூற்றுக் கணக்கானவர் களுக்கு வாழ்வளிக்கும் ஒரு தொழில திபராக விளங்குகின்றார். யாழ் மண்ணில் உற்பத்தியாகும் விளை பொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து அவற்றை அரைத்தும், பதப்படுத்தி யும், நவீன முறையில் பல்வேறு விதமான பொருட்களாக உற்பத்தி செய்து தனது வர்த்தக முயற்சியால் விற்பனவு செய்து வரும் நிறுவனமே அண்ணா நிறுவனம்.

ஆரம்பத்தில் உரல் ஒன்றே உற்பத்திக் களமாகித், தனது சகோதர சகோதரிகளும் தானுமே தொழிலாளர்களாகி, ஊர் அயலே விற்பனைச் சந்தையாகி முகிழ்த்த ஒரு குடிசைக் கைத்தொழில், ஒரு சீரிய சிறுகைத்தொழிலாக வளர்ச்சி கண்டு, இன்று இந்நாடு தழுவிய விற்பனைச் சந்தையைப் பெற்றுக் கொண்டதுடன் நின்றுவிடாமல் கடல்கடந்த நாடுகளுக்கும் விநியோகிக்கும் நிலையை அடைந் துள்ளது.

சித்தர் அண்ணாமலைப் பரிகாரியாரின் வழிகாட்டலில் அவர் ஆசியுடன் தொடங்கிய மூலிகைப் பற்பொடி அண்ணாமலைப் பரிகாரியாரின் பெயரையே தாரக மந்திரமாகக் கொண்டு அண்ணா பற்பொடி எனத் தொடங்கி அண்ணா கோப்பியாகி இன்று இருபதுக் கும் மேற்பட்ட மாவகைகள், பத்துக்கு மேற் பட்ட தூள்வகைகள், பத்துக்கு மேற்பட்ட பண்ணை உற்பத்திப் பொருட்கள் ஊது பத்தி வகைகள், ரொபி இனிப்பு வகைகள், விலங்குணவுகள் என்று பல்கிப்பெருகி நவீன உற்பத்திச் சாதனங்களுடன் நவீனப் பொதி செய் விதங்களுடன் வளர்ந் தோங்கியுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகால வர லாற்றில் யாழ்ப்பாணத்து வர்த்தகத் துறையை எடுத்து நோக்குவோமாயின் ஓகோ என்று கொடிகட்டிப் படர்ந்த எத்தனையோ வர்த்தக நிலையங்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டன. சில நிலைகுலைந்து நலி வடைந்துவிட்டது. மிகச்சில தான் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக் கின்றன.

கால வெள்ளத்தை எதிர்த்து நின்று இன்னும் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிறுவனங்களில் எல்லார் கவனத் தையும் கவர்ந்த நிறுவனம் அண்ணா



பொதுசன நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பி நிறுவனம் என்றால் அதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

இதன் காரணம் இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் யாவும் கலப்படமற்ற தூய்மையானவை. எந்த வகையிலும் நுகர்வோர்க்குத் தீங்கியிழைக்காதவை, எக்காலத்தும் நிதானமான விலையை உடையவை, போலித்தன்மை இல்லா உண்மைப் பொருட்களாகவே இருப்பதால் நம்பிக்கைக்குரியவையாகத் திகழ்கின்றன.

இதற்கு அண்ணா தொழிலதிபர் எஸ்.பி.என் அவர்களுடைய பண்பும் முக்கிய காரணமாயுள்ளது. அவரது எளிமை, பணிவு, அடக்கம் எவருடனும் பண்பாகப் பழகும் தன்மை, மனோதிடம், கடினஉழைப்பு, காலந்தவறாமை, நேர்மை, கண்ணியம், சுயகட்டுப்பாடு என்பவற்றின் முழுவடிவமாக இவர் இருப்பதே காரணமாகும்.

“சிரிக்கத் தெரியாதவர்கள் கடை விரிக்கக் கூடாது” என்று ஒரு சீனப் பழமொழி உண்டு என்பர். இவரைக் காணும் போதெல்லாம் எவருக்கும் இந்தப் பழ மொழி நினைவுக்குவரும். எந்நேரமும் சிரித்துக் கொண்டே இனிக்கப் பேசும் இயல்பு இருக்கே சொந்தம் என்றால் தவறாகாது.

பணத்தாற் பாதிக்கப்படாத பண்பாளராக அடக்கமாக வாழ்பவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழும் தொழிலதிபர் அண்ணா நடராசா அவர்கள். பலநூறு பேர்களுக்கு நேர்முகமாகத் தொழில் கொடுத்து வாழ்வளித்தும், மறைமுகமாக விவசாயிகள் முதல் வர்த்தகர்கள் வரை பல ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்பளித்தும் வருகின்ற பெருமைக்குரியவர்.

தனது தொழில் முயற்சியில் போர் அனர்த்தங்களாலும், இடப்பெயர்வு களாலும், பிறகாரணிகளாலும் காலத் துக்குக் காலம் பேரிழப்புகளும் இடர்களும் ஏற்பட்ட போதும், அவற்றையெல்லாம் ‘மீண்டும்’ தொடங்கும் மிடுக்குடன் வென்று சாதனையாளராகத் திகழும் தொழிலதிபர் அண்ணா நடராசா அவர் கள் வரலாறு தொழில் முயற்சியில் வளர விரும்புவோர்க்கு நல்லதோர் பாடப் புத்தகம் என்றால் மிகை இல்லை. ★

**- கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை -**

## ‘இணுவில் ஒலி’ வெளியீட்டு விழா



கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 24-10-2012 அன்று நடைபெற்ற வெளியீட்டு விழாவில் சஞ்சிகை ஆசிரியர் தம்பு சிவா ஏற்புரை வழங்குவதையும், விழாவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் வ.மகேஸ்வரன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் சபா ஜெயராசா, பிரதி சுங்க அத்தியட்சகர் நடராசா சிறீரஞ்சன், றோயல் கல்லூரியின் பிரதி அதிபர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் விழா மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Printed By : Global graphics
#14, Colombo Tamil Sangam Lane , Wellawatta, Colombo - 06. Tel : 2360678



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org